பக்கங்கள்:10 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 16 வெள்ளிக்கிழமை 31.12.2021 கதிர் 56



## இது ரகசியம் அல்ல!

அரசியலில் நிரந்தர எதிரிகளும் இல்லை, நிரந்தரப் பகைவர்களும் இல்லை என்பார்கள். உண்மைதான்.

எதிரெதிர்த் துருவங்களாக மோதும் தரப்புகளை அரசியல் சூழ்நிலைகள், நெருக்கடிகள் சில சமயங்களில் பக்கம்02

# திரும்பவும் ஜனவரி 10 பஸில் இந்தியாவுக்கு!

## இம்முறை மோடியைச் சந்திப்பார்



கொழும்பு, டிசெம்பர் 31

அமெரிக்காவிலிருந்து நேற்று நாடு திரும்பியநிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இன்னும் பத்து நாள்களில் மீண்டும் இந்தியா செல்லவிருக்கின்றார். இந்தமுறை இந்தியப்பிரதமர் நரேந்திர மோடியை அவர் பெரும்பாலும் சந்திப்பார் என இந்திய செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. ☞2



# நயினாதீவில் மினி சூறாவளி: 3 வீடுகள் பகுதியாகச் சேதம்

யாழ்ப்பாணம் - நயினாதீவு வடக்கு பகுதியில் நேற்று மாலை வீசிய மினி சூறாவளித் தாக்கத்தினால் ஆறு குடும்பங்களைச் சேர்ந்த 14 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் என்.சூரியராஜ் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் நேற்றுக் காலையிலிருந்து மழையுடன் கூடிய காலநிலை நிலவுகின்ற நிலையில் ☞2

# ஆளுநரின் போக்கால் தவராசா மன வருந்தம்





(ந.லோகதயாளன்)

மாகாண சபையின் வரம்பையறியாமல் வடக்கு மாகாண ஆளுநர் செயல்படுவதனை எண்ணி மனம் வருந்துகின்றோம் என வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும், அரச கூட்டணியில் இடம்பெற்றிருக்கும் ஈ.பி.டி.பியின் பிரமுகரும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் உதவியாளருமான ☞2

# சட்டவிரோதமான இறால் கூடுகளை உடன் அகற்ற அமைச்சர் நடவடிக்கை

(இ.கலையமுதன்)

சுண்டிக்குளம், 'கலப்புக் கடல்' என்று அழைக்கப்படும் ஆனையிறவுக் கடல் நீரேரிப் பகுதியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள இறால் கூடுகளை நேற்று நேரில் சென்று பார்வையிட்ட கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அவற்றை உடனடியாக அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள குறித்த இறால் கூடுகளால் பருவமடையாத இறால்கள் பிடிக்கப்படுவதுடன், மீன் குஞ்சுகளும் அழிவடைகின்றன.

இதனால், கடல் வளங்கள் பாதிக்கப்படுவதுடன், பொருளாதார இழப்பும் ஏற்படுகின்ற நிலையில், வளங்களை முகாமைப்படுத்தி மக்களுக்கு உச்ச ☞10

# மேல் நீதிமன்ற நீதிபதிகள் இடமாற்றம் வவுனியாவுக்கு மீண்டும் இளஞ்செழியன்



வடக்கு - கிழக்கு மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கு 2022 ஜனவரி 5ஆம் திகதி நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

வழமையான இடமாற்ற நடைமுறையின் கீழ் இந்த இடமாற்றம் பிரதம நீதியரசரினால் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மேல் ☞2

# தமிழர்களை ஒதுக்கிப் பிரிந்திருந்தால் முஸ்லிம்களது எதிர்காலம் கேள்விக்குறி

## சுரேஷ் பகிரங்க எச்சரிக்கை



(இ.கலையமுதன்)

தமிழ் மக்களை ஒதுக்கி தனித்துப் பிரிந்திருந்தால் முஸ்லிம் மக்களது எதிர்காலம் கேள்விக்குள்ளாகும் என்பதை அவர்களது தலைவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தெற்கில் யார் ஆட்சியில் இருந்தாலும் தமிழ், முஸ்லிம் மக்களது சம உரிமையை ☞10

# திருமணத்துக்காக இலங்கை வந்தவர்கள் பெரும் தவிப்பு!

## அவசர அவசரமாக பதிவுத் திருமணம்

வெளிநாட்டவர்களைத் திருமணம் செய்ய எதிர்பார்க்கும் எந்த இலங்கையரும் அத்திருமணத்தைப் பதிவுசெய்வதற்கு பாதுகாப்பு அமைச்சின் ' பாதுகாப்பு தடைநீக்கல் சான்றிதழ் பெறுவது' 2022ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளமையால் திருமணம் செய்துகொள்ளும் எதிர்பார்ப்பில் இலங்கை வந்துள்ளவர்கள் குழப்பத்தில் ஆழ்ந்துள்ளமை பற்றிய தகவல்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வெளியாகிய வண்ணமுள்ளன.

புதிய பாதுகாப்பு விதிமுறைகளைத் தவிர்த்துக்கொள்வதற்காக இலங்கை வந்துள்ள வெளிநாட்டவர்கள் பலரும் திருமணப் பதிவாளர்களிடம் கடந்த சில நாள்களாகப் படையெடுத் ☞10

# உள்நாட்டு பால்மா விலையும் உயர்வு

இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், தேசிய பால்மாவின் விலையும் நிச்சயம் அதிகரிக்கப்படும் என்று இராஜாங்க அமைச்சர் டி பி ஹேரத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலக சந்தையில் பால்மா விலை அதிகரித்துள்ளது. ☞10

# மின் கட்டணம் உயராது!

## அமைச்சர் காமினி லொக்குகே அறிவிப்பு



தற்போதைய சூழ்நிலையில் மின் கட்டணத்தை அதிகரிக்கும் திட்டம் இல்லை.

- இவ்வாறு மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே நேற்று ஊடகங்களிடம் தெரிவித்தார்.

நாட்டில் பொருள்களின் விலைகள் நாளாந்தம் அதிகரிக்கின்றன. இந்நிலையில் மின்சார கட்டணமும் உயருமா என எழுப் ☞10

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றிணைந்து செயற்படும் கட்டாயத்தை ஏற்படுத்திவிடும். அச்சமயங்களில் – நேற்று வரை எதிரிகளாக மோதிக் கொண்டவர்கள், இன்று ஒன்றித்துச் செயற்படும் முடிவை எடுக்கும் போது – அது தொடர்பில் தத்தமது தரப்புகள் குழப்பாமல் இருப்பதை சமாளிப்பதற்கு ஒரு தந்திரம் செய்வார்கள்.

அந்த ஒன்றிணைவு தொடர்பான அதிரடி விமர்சனங்களைச் சமாளிப்பதற்கான 'போர்முலா' (சூத்திரம்தான்) அது. அதற்குப் பெயர் Common Minimum Programme – ஆகக் குறைந்த பொது வேலைத்திட்டம் – என்பதுதான்.

இஸ்ரேல் போன்ற நாடுகளில் அடிக்கடி தொங்கு நாடாளுமன்றங்கள் வரும் போது எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்தால்தான் அரசமைக்க முடியும் என்ற கட்டாயம் தொடர்ந்து நேரும். அதைச் சமாளிப்பதற்கான ஏற்பாடுகளில் ஒன்றுதான் ஆகக் குறைந்த பொது வேலைத் திட்டம்.

இப்போது, தமிழ்ப் பேசும் தரப்புக்களிடையே பொது நிலைப்பாட்டு ஆவணம் ஒன்றை உருவாக்கும் – ரெலோ முன்னேற்பாட்டிலான – முயற்சி முட்டுச் சந்தில் வந்து முடங்கி நிற்கின்றது.

கடந்த 21ஆம் திகதி கொழும்பு குளோபல்டவர்ஹோட்டலில்நடைபெற்ற தமிழ்ப் பேசும் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் ஒன்றுபட்டு வந்த சம்பந்தன் – சுமந்திரன் – மாவை அணி அன்றைய ஆவண நகல் தயாரிப்பு ஒழுங்கைத் தன் கட்டுப்பாட்டில் எடுத்து முன்நகர்த்தி வென்று சென்றுவிட்டது. ஆங்கிலத்தில் சொல்வதானால் stole the show. அன்றைய கூட்டத்துக்குச் சமுகம் தந்திருந்த வேறு ஒரு சில கட்சிப் பிரதிநிதிகளுடன் சேர்ந்து தமக்கு வசதியான விதத்தில் ஆவணத் தயாரிப்பை ஒப்பேற்றி, விடயத்தை அன்றைய தினம் முடித்தார் சுமந்திரன். இந்த ஒன்றுகூடல் முயற்சியில் சம்பந்தனையும் தமிழரசையும் வெளியேற விடாமல் கட்டிப் போட்டு வைத்திருக்க வேண்டும் என்ற கட்டாயம் கருதியும், சுமந்திரனின் ஆளுமையாலும், அன்றைய கூட்டத்தில் அந்த நகலுக்கு இணங்கி வந்த சில கட்சித் தலைவர்களுக்கு, வெளியில் வந்து விடயத்தைத் திரும்பி ஊடுருவிப் பார்த்த போதுதான் நிலைமை விளங்கியது.

யார், யாருக்கு அந்த நிலைமை ஏற்பட்டிருக்கும் என்பதை வாசகர்களே புரிந்து கொள்வர். நான் விலாவாரியாகக் குறிப்பிடப் போனால், தமிழர் தரப்புகள் ஒன்றுபடுவதற்கு நான் ஆப்பு வைக்கிறேன் என்ற குற்றச்சாட்டுக் கிளம்பும். அதனால் விட்டுவிடுகிறேன்.

அப்படிக் குழம்பிய தலைவர்கள் பக்கத்திலும் அரசியல் நியாயங்கள் இருக்கின்றன. பதின்மூன்றை முற்றாக நடைமுறைப்படுத்தக் கோருவதுதான் ஆவணத் தயாரிப்பின் நோக்கம் என்றால் அதற்கு இணங்கமாட்டோம் என்று தமிழரசு பிடிவாதம் பிடிப்பதிலும் நியாயம் உண்டு.

இந்தத் தரப்புக்களை எல்லாம் ஒன்றிணைக்கும் – மணலைக் கயிறாகத் திரிக்கும் – இந்த எத்தனத்தில் மலைத்துப் போய் நிற்கும் ஏற்பாட்டாளர்களான ரெலோ பக்கத்திலும் நியாயங்கள் உண்டு.

கடைசியாக எல்லோரும் ஒரு Common Minimum Plan இற்கு இணங்க முடியாதா – எல்லோரையும் சமாளிக்கும் ஓர் ஆவணத்துக்கு உடன்பட முடியாதா – என்பதைப் பற்றி சம்பந்தனுடன் நேரடியாகப் பேசுவதற்குத்தான் மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம், தமிழர் முற்போக்கு முன்னணித் தலைவர் மனோகணேசன், ரெலோத் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் சம்பந்தனை இன்று அவரது இல்லத்தில் சந்திக்கின்றனர்.

இந்தக் கூட்டத்துக்கு சுமந்திரனுக்கு அழைப்பு இருப்பதாக நேற்றிரவு வரைத் தெரியவில்லை. ஆகக் குறைந்த பொது வேலைத் திட்ட முயற்சிக்கு சம்பந்தன் இணங்கினால்கூட, மாவை சேனாதிராசாவுடன் பேசாமல் ஒரு முடிவுக்கு அவர் வரமாட்டார். மாவையுடன் பேசி முடிவெடுத்தாலும் சுமந்திரனின் பங்களிப்புடன் அந்த ஆவணம் தயாரிக்கப்படாத நிலையில் அதில் சம்பந்தன் ஒப்பமிட மாட்டார்.

இன்று வருட முடிவு நாள். டிசெம்பர் 31 ஆம் திகதி. நாளை, புதுவருடம். நாளை ஆவணத்தில் கையெழுத்திடலாம், கொழும்பு வாருங்கள் என்ற அழைப்பு ஏற்பாட்டுத் தரப்பினால் நேற்று தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராசாவுக்குத் தெரியப்படுத்தப்பட்டதாக அறியவந்தது.

இந்தப் பொது ஆவணத்தில் 29ஆம் திகதி ஒப்பமிடப்படும் என முன்னர் தெரியப்படுத்தப்பட்டமையால் தமது கொழும்பு விசிட்டை 29 ஆம் திகதி வரை நீடித்துப் பார்த்திருந்துவிட்டு அன்றைய தினம்தான் (நேற்றுமுன்தினம் தான்) கொழும்பிலிருந்து யாழ். திரும்பியிருந்தார் மாவை. அதற்கிடையில், முதலாம் திகதி மீண்டும் ஒப்பமிடலாம், கொழும்பு வாருங்கள் என்றதும், அத்தரப்பு மீது மாவை பாய்ந்தார் எனவும் ஒரு வட்டாரம் தெரிவித்தது. "எந்த ஆவணத்தில் ஒப்பமிடுவது? அது எதுவும் தெரியாமல் சும்மா கொழும்பு வாருங்கள் என்றால் என்ன கதை?" என மாவை சீறியதிலும் அர்த்தம் இருக்கத்தான் செய்கின்றது.

மனோ – ஹக்கீம் – செல்வம் முத்தரப்பும் சம்பந்தனுடன் இன்று நடக்கும் சந்திப்பு புதிய இணக்கம் ஒன்றுக்கு வழி செய்யுமானால் நல்லதுதான்.

உத்தேச குறைந்த பட்ச பொது இணக்கப்பாட்டு வேலைத் திட்டத்தில், 13 இன் முழு நடைமுறையாக்கம் வற்புறுத்தப்படுமா? தெரியவில்லை. பார்போம்.

✦✦✦

ஒரு கிலோ பால்மா பக்கெட்டின் விலை நேற்று முதல் 150 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன்படி புதிய விலை 1,345 ரூபா. நானூறு கிராம் பக்கெட்டின் விலை 60 ரூபாவால் உயர்ந்து இனிமேல் பக்கெட் 540 ரூபாவுக்கு விற்கப்படும்.

பால்மா பக்கெட் விவகாரம் ஒன்று சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கின்றது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமது மிரிஹான இல்லத்திலிருந்து ஜனாதிபதி அலுவலகத்துக்குச் செல்லும் வழியில் உள்ள சுப்பர் மார்க்கெட்டில் பால்மா பக்கெட்டுக்காக தினசரி நீண்ட கியூ நிற்பது வழக்கமாகி உள்ளது. நேற்றுமுன்தினம் ஜனாதிபதியின் வாகன அணி அப்பகுதியைத் தாண்டிச் சென்ற சமயம் பால்மா பக்கெட்டுக்கு வரிசையில் நின்றவர்கள் ஆத்திரத்தில் கூக்காட்டிச் சத்தமிட்டுக் கத்தியிருக்கின்றார்கள். ஜனாதிபதி விசனத்துடன் அதைப் பார்த்துச் சென்றார் என்று கூறப்படுகின்றது.

அவ்வளவுதான். ஒரு மணி நேரம் கழித்து ஒரு பிரதிப் பொலிஸ் மா அதிபர் தலைமையில் ஒரு பெரிய பட்டாளம் அங்கு பாய்ந்து வந்தது.

"ஜனாதிபதி பயணிக்கும் பாதை இது. இங்கு கியூ நிற்க முடியாது. கியூவில் வைத்துப் பால்மா விநியோகிக்கக் கூடாது. முதல்நாள் ஆள்களுக்கு 'டோக்கன்' கொடுத்து, அடுத்த நாள் அந்த டோக்கனுக்கு பால்மா பக்கெட் விநியோகிக்கக்காம்" எனக் கட்டளையிடப்பட்டுள்ளது. பால் மாவுக்கு வரிசையில் காத்திருந்தோர் துரத்தப்பட்டனர்.

இவ் விடயத்தை ஒட்டி மக்களின் சீற்றத்தை கொழும்பு தொலைக்காட்சி ஊடகங்கள் ஒளிபரப்பியுள்ளன. அரசுக்கும் ஜனாதிபதிக்கும் எதிரான எதிர்ப்பு மெல்ல மெல்ல பீறிட்டு எழுந்து வருவதாகவே எனக்கும் தோற்றுகின்றது. ராஜபக்ஷக்கள் தங்களைத் திருத்திக் கொள்ளாவிட்டால் இன்னொரு தடவை மீளெழுச்சிக்கும் வாய்ப்பில்லாமல் போய்விடும் என்பது தான் நிலைமை.

✦✦✦

கஷ்டங்கள், நெருக்கடிகள் வரும். அதற்காகப் பண்டிகைகளைக் கொண்டாடாமல் விட முடியாதல்லவா? வரும் 14ஆம் திகதி தைப்பொங்கல். இம்முறை தென்னிலங்கையின் இரண்டு தரப்புக்கள் தைப்பொங்கலை ஒட்டித் தங்கள் புஜபல பராக்கிரமத்தைக் காட்டும் தளமாக வடக்கை – யாழ்ப்பாணத்தை – தேர்தெடுத்திருக்கின்றன.

ஆளும் தரப்பிற்குள் பிரதான கட்சியான பொதுஜன பெரமுனவுக்கு வாய்சவடால் மூலம் அதிகம் சவால் விடும் தலைவர் தயாசிறி ஜயசேகரா. சு.கவின் பொதுச் செயலாளர். பற்றிக் கைத்தறி துணிகளுக்கான இராஜாங்க அமைச்சுத்தான் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

தைப்பொங்கலன்று யாழ்ப்பாணத்தில் (பெரும்பாலும் வீரசிங்கம் மண்டபத்தில்) பற்றிக் கண்காட்சி ஒன்றை நடத்தி, நம்மவரைத்திரட்டி, தைப்பொங்கலைக் கொண்டாட தயாசிறி ஏற்பாடு செய்திருக்கின்றார்.

அதேசமயம், அன்றைய தினம் வழமையான வல்வெட்டித்துறை பட்டப் போட்டியை 'சர்வதேச பட்டத் திருவிழா' ஆக மாற்றி சனத்தைத் திரட்டவும், அதேசமயம் தமது இளைஞர் விவகார அமைச்சு மூலம், யாழ்ப்பாணத்தில் பொங்கல் திருவிழாவை நடத்தவும் நாமல் ராஜபக்ஷ நடவடிக்கை எடுத்திருக்கிறார்.

பொதுஜன பெரமுன – சு.க. பலப்பரீட்சை புத்தாண்டில், தைப்பொங்கல் தினத்தன்று, யாழ்ப்பாணத்தில் ஆள்களைத் திரட்டும் போட்டியுடன் ஆரம்பமாகப் போகின்றது. அவ்வளவுதான்.

– மின்னல் –

## திரும்பவும் ஜனவரி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த நவம்பர் 30 ஆம் திகதி முதல் 2 ஆம் திகதி வரை நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ புதுடில்லிக்கு விஜயம் செய்திருந்தார். அப்போது அவர் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்திப்பார் எனப் பரவலாகச் செய்தி அடிபட்ட போதிலும், பிரதமருடனான சந்திப்புக்கான நேர ஒதுக்கீட்டில் இக்கட்டு ஏற்பட்டதால் சந்திப்பு சாத்தியமாகவில்லை என அப்போது கூறப்பட்டது.

எனினும் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆகியோரை பஸில் ராஜபக்ஷ சந்தித்து இலங்கைக்கான உதவித் திட்டக் கோரிக்கைகளை முன்வைத்திருக்கின்றார்.

இப்போது வரும் ஜனவரி 10 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை இந்தியாவில் நடைபெறும் "அதிர்வு மிக்க குஜராத் மாநாடு" ('Vibrant Gujarat Summit') நிகழ்வில் பங்கு பற்றும் இலங்கைக் குழுவுக்குத் தலைமை வகித்து பஸில் ராஜபக்ஷ இந்தியா செல்வார் என இந்திய வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

வரும் 8,9 ஆம் திகதிகளில் சீன வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு விஜயம் செய்யவிருக்கின்றார். அவருடனான சந்திப்புகள், கலந்துரையாடல்களை முடித்துக் கொண்டே பஸில் இந்தியா புறப்படுவார் எனக் கூறப்படுகின்றது.

பிரதமர் நரேந்திரமோடியின் சொந்த மாநிலமான குஜராத் பற்றிய மாநாட்டில் பங்குபற்றுவதற்கு இலங்கை நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ இந்தியா செல்வதால், இப்போது அவரைப் பிரதமர் நரேந்திர மோடி நிச்சயம் சந்திப்பார் என்று சில வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்தன. (உ)

## நயினாதீவில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று மாலை வேலணை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நயினாதீவு வடக்கு ஜே 35 கிராம சேவகர் பிரிவில் வீசிய மினி சூறாவளியின் தாக்கத்தினால் மூன்று வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆளுநரின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எஸ்.தவராசா தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநரின் இரு கலந்துரையாடல்களில் அமைச்சரின் சார்பில் பங்கு கொண்டிருந்தேன். இரு கூட்டங்களும் ஓர் மேலதிகாரியின் கலந்துரையாடல்போல் அல்லாது தொண்டு நிறுவனம் ஒன்றின் கலந்துரையாடலை ஒத்ததாக நடைபெற்றன. ஆளுநர் தனக்கு உள்ள அதிகாரம் என்ன என்றோ அல்லது எதனை செய்ய முடியும் என்பதையோ அறியாதவராகவே காணப்படுகின்றார்.

இவ்வாறு வரையறை அறிந்திருக்காவிட்டாலும் தெரிந்தவர்களின் ஆலோசனையைப் பெறவேண்டும். அவ்வாறு இடம்பெறுவதாகவும் தெரியவில்லை. இதனால் அவரின் கீழ் உள்ள அதிகாரிகளை மட்டுமன்றி மக்கள் பிரநிதிகளையும் அழைத்து நேரம் கடத்துவதாகவே விடயங்கள் அமைகின்றன.

இதேநேரம் 29ஆம் திகதி யாழ். மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் வடக்கின் எந்தவொரு மக்கள் பிரதிநிதியும் கலந்துகொள்ளவில்லை. இருப்பினும் நான் உட்பட இருவர் பதில் பிரதிநிதிகளாகக் கலந்து கொண்டோம். கூட்டத்தில் வைத்து அனைத்துப் பிரதிநிகளையும் மூன்று குழுவிற்குள் பிரித்து ஒரு திட்டத்திற்கான ஏற்பாட்டை மேற்கொண்டால் அது எவ்வாறு வெற்றியளிக்கும்? மாறாக தோல்வியிலேயே முடிவடையும்.

இதனால் ஆளுநரின் செயல்பாட்டை எண்ணி வேதனை அடைவதைத் தவிர வேறு ஏதும் கூறமுடியவில்லை. ஏனெனில் ஆளுநரின் விடயத்தில் பூனைக்கு யார் மணி கட்டுவது என்றே அதிகாரிகள் விழிப்பதனால் நான் இதனைக் கூறுகின்றேன். – என்றார்.

## மேல் நீதிமன்ற .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர், திருகோணமலை குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதியாக இடமாற்றப்பட்டுள்ளார்.

திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன், வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதியாக இடமாற்றப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதி டெனிஸ் சாந்தன் சூசைதாஸன், திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதியாக இடமாற்றப்பட்டுள்ளார்.

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி இராமநாதன் கண்ணன், யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதியாக இடமாற்றப்பட்டுள்ளார்.

திருகோணமலை குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதி விநாயகமூர்த்தி இராமக்கமலன், மட்டக்களப்பு குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதியாக இடமாற்றப்பட்டுள்ளார்.



காலைக்கதிர் Kalaikkathir

# நாட்டில் இராணுவ ஆட்சிக்குக் கோட்டா பயன்படுத்திய ஆயுதமே ஞானசார தேரர்!

## சிறிதரன் எம்.பி. காட்டம்

நாட்டில் இராணுவ ஆட்சியைக் கொண்டு வருவதற்கு, கோட்டா பயன்படுத்திய ஆயுதமே ஞானசார தேரர் எனத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும், நாட்டில் ஜனநாயகம் பேசினால் சிறையில் அடைக்கும் ஆட்சியின் கீழ் நாம் வாழ்கின்றோம். நாட்டில் இராணுவ ஆட்சியைக் கொண்டு வருவதற்காக, சிறையில் இருந்த தேரரை கொண்டு வந்து தனது ஆயுதமாகக் கோட்டா பயன்படுத்தி வருகின்றார்.

இராணுவத் தளபதிகளை அமைச்சின் செயலாளர்களாக அவர் நியமித்துள்ளார். கிட்டத்தட்ட 14 அமைச்சின் செயலாளர்கள், இராணுவத் தளபதிகள் அத்துடன் ஆளுநர், திணைக்களத் தலைவர்களும் அவ்வாறே நியமிக்கப்பட்டுள்ளனர்.

புத்த பெருமானின் அவதாரமாகத் தன்னை காட்டிக்கொள்ளும் தேரர் இப்போது, ஒரே நாடு – ஒரே சட்டம் என்ற புதிய அவதாரத்தை எடுத்துள்ளார்.

நாம் இப்போதும் இராணுவ ஆட்சியில் தான் உள்ளோம். இது தமிழ் மக்களுக்கு மட்டும் இடி அல்ல. சிங்கள மக்களுக்கும் இது ஆபத்தானது. ஏனென்றால் 1970 களில் கதிர்காமத்து அழகி மன்னம்பேரியை நிர்வாணமாக்கி கொன்றவர்கள் இராணுவத்தினர்.

பிரேமதாஸ காலத்திலும் சுமார் 50 ஆயிரம் சிங்கள இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதற்காக அப்போது பிரேமதாஸவுக்கு எதிராக மஹிந்த ராஜபக்ஷ சர்வதேசம் வரை சென்றிருந்தார்.

ஆகவே, இராணுவத்துக்கு சிங்களம், தமிழ் என்ற வேறுபாடு இல்லை. துப்பாக்கி முனையில் அனைவரையும் கொல்வதே அவர்களின் நோக்கம்.



தமிழர்கள் முதலும் இராணுவ ஆட்சியில் இருந்தார்கள். அதேபோல பொருளாதார ரீதியான பிரச்சினைகளை தமிழர்கள் எதிர்கொண்டு வாழ்ந்தவர்கள். எனவே, தமிழர்களுக்கு இது புதிதல்ல. சிங்கள மக்கள் தற்போது துன்பத்தை உணர ஆரம்பித்துள்ளனர். – என்றார்.

## கிணற்றில் சிறுமி சடலமாக மீட்பு!

புத்தளத்தில் சிறுமி ஒருவரின் சடலம் கிணற்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கருவலகஸ்வெள, சியம்பலேவ கிராமத்தில் 15 வயதுடைய சிறுமியின் சடலம் கிணற்றில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளதென பொலிஸார் தெரிவித்தனர்.

கருவலகஸ்வெள, டீ.எஸ்.சேனாநாயக்க வித்தியாலத்தின் 10 ஆம் வகுப்பில் கல்வி கற்கும் மாணவியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.



சிறுமியின் தாய் கூலி வேலை செய்து சம்பாதித்த பணத்தில் சிறுமியின் கல்வி நடவடிக்கைகளுக்காக கையடக்க தொலைபேசி ஒன்றை கொள்வனவு செய்து கொடுத்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கமைய இந்த சிறுமி கருவலகஸ்வெள பிரதேசத்தைச் சேர்ந்த 17 வயதுடைய சிறுவனுடன் காதல் தொடர்பு வைத்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

குறித்த இளைஞனுடன் கடந்த இரு நாள்களாக குறுந்தகவல்கள் பரிமாறிக் கொண்டுள்ளார். அதன் பின்னர் ஏதோ ஒரு விடயம் தொடர்பில் மனரீதியான பாதிப்புக்குள்ளாகியிருந்தார் என விசாரணைகளில் உறுதியாகியுள்ளதென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.







## சுகாதாரத் தொழிற்சங்கக் கூட்டமைப்பு யாழ்ப்பாணத்தில் கவனவீர்ப்புப் பேரணி

யாழ்ப்பாணம், டிசெ. 31

சுகாதார தொழிற்சங்க கூட்டமைப்புடன் இணைந்து நாடு தழுவிய ரீதியில் மாகாண ரீதியாக நடத்தப்படும் தொழிற்சங்க நடவடிக்கை நேற்று யாழ்ப்பாணத்தில் நடந்தது.

நேற்று (வியாழக்கிழமை) காலை 10.30 மணி அளவில் வடமாகாணம் முழுவதும் உள்ள சுகாதார தொழிற்சங்க உறுப்பினர்கள் கவனவீர்ப்புப் பேரணி ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்களால் சுகாதாரத் துறையை அழிக்காதே, சுகாதார நிர்வாக சேவையை ஆரம்பி, விசேட கொடுப்பனவை உயர்த்து, பொது மக்களின் ஆரோக்கியத்தில் கவனம் எடு, பதவி உயர்வு முரண்பாட்டைத் தீர்த்து வை, பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக முகக்கவசங்களை வழங்கு, நணுக்கின் அறிக்கையை நடைமுறைப்படுத்து போன்ற கோஷங்கள் எழுப்பப்பட்டன.

போராட்டம் காரணமாக யாழ். நகரப் பகுதியில் பாரிய வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் அதனை சீர் செய்வதற்காக பொலிர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

## கித்துல் மரத்தில் தொங்கிய சடலம்!



கித்துல் பூ வெட்டச் சென்ற நபர் ஒருவர் கித்துல் மரத்தின் மேலேயே உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஊவ பரணகம பனாகொட பிரதேசத்தில் இந்த துரதிஷ்டவசமான சம்பவம் பதிவாகியுள்ளது.

60 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கித்துல் மரங்களில் பூ வெட்டச் சென்றவர் திரும்பி வராதமையால் அவருடைய குடும்பத்தினர் காணாமல் போன நபரை தேடியுள்ளனர். இதன்போது, கித்துள் மரத்தில் இருந்து அவரது சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மரத்தில் ஏறுவதற்காகக் கட்டப்பட்டிருந்த கயிற்றில் அவர் சிக்கியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் ஊவ பரணகம பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமையுடன், மரணத்துக்கான காரணம் இதுவரையில் வெளியாகவில்லை.

## இலங்கையில் திட்டங்களுக்கு வந்த சீனர் பெண்களை ஏமாற்றி சீனாவில் விபச்சாரம்!

### விசாரணைக்கு உத்தரவிட்டார் பொலிஸ்மா அதிபர்

இலங்கையில் திட்டங்களைச் செயற்படுத்துவதற்காகவந்துள்ளசீனப்பிரஜைகள்இலங்கைப் பெண்களைத் திருமணம் செய்து சீனாவுக்கு அழைத்துச் சென்று பலவந்தமாக விபச்சாரத்தில் ஈடுபடும் மோசடி தொடர்பில் விசாரணை நடத்த பொலிஸ் மா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

கடத்திச் செல்லப்பட்டு விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்பட்ட பத்து இலங்கைச் சிறுமிகள் தொடர்பில் ஏற்கனவே தகவல்கள் கிடைத்துள்ளன எனச் சிரேஷ்ட பாதுகாப்புத் தலைவர் ஒருவர் தகவல் அளித்துள்ளார்.

ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த அழகான இளம் பெண்களைத் தேர்வு செய்து திருமணம் செய்து சீனாவுக்கு அழைத்துச் சென்று இரவு விடுதிகளில் பணிக்கமர்த்துவது தெரியவந்துள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## வினையைத் தேடிய முட்டாள்தனம்

நாட்டின் இன்றைய மோச நிலைமைக்கான காரணம் யாது என்பதை வெளிப்படையாகப் பேச, விவாதிக்க, பலரும் பின்நிற்கும் ஒரு நிலைமையைக் காண்கின்றோம்.

குருவி இருக்கப் பனம் பழம் விழுந்த கதையாக நாட்டின் இன்றைய மோசமான பின்னடைவு நிலைக்கு எல்லோரும் கொவிட் தொற்றுப் பரம்பல் மீது பழிபோட முனைகின்றனர்.

கொவிட் தொற்றுப் பாதிப்பினால் சில பின்னடைவுகள் ஏற்பட்டன என்பது உண்மைதான். வாஸ்தவம் தான். ஆனால் நாட்டின் இன்றைய மோசமான நிலைக்கு அது பிரதான காரணம் அல்ல.

பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுக்க முடியாமல் நாடு திண்டாடுகின்றது. கொவிட் தொற்றுப் பின்னடைவுகளினால் ஏற்பட்ட பொருளாதாரப் பாதிப்புக்கள், நீண்டகாலம் பல நாடுகளிடம் கடன் வாங்கி நிர்வாகம் நடத்தியமையால் கழுத்தை வந்து இறுக்கும் கடன் தவணைக் கட்டணங்கள் போன்றவை மட்டும் இன்றைய இந்த இக்கட்டு நிலைமைக்குக் காரணம் என்று சொல்லிவிட முடியாது.

இவை எல்லாவற்றையும் கையாள்வதில் ஏற்பட்ட மோசமான நிர்வாக முறைமையும், அதையும் தாண்டி இந்த நெருக்கடி காலத்தின் தீவிரத்தைக் கவனத்தில் கொள்ளாமல் எதேச்சாதிகாரமாக முன்னெடுக்கப்பட்ட முட்டாள்தனமான புதிய கொள்கை நடவடிக்கைகளுமே இந்தக் கேவல நிலைமைக்கு பிரதான காரணங்களாகும்.

'குரங்கின் கைப் பூமாலையாக' நாட்டின் நிர்வாகம் பிழையான – திறனற்ற – அரச நிர்வாக விடயங்களின் ஆழ அர்த்தங்களைப் புரிந்து கொள்ளாத – தீர்க்கதரிசன சிந்தனையேயில்லாத – தரப்புக்களின் கைகளில் போனமையே நாடு இன்று இப்படிச் சிக்கிச் சீரழியப் பிரதான காரணமாகும்.

இதனை பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார வெளிப்படையாக – அப்பட்டமாக – எடுத்துரைத்திருக்கின்றார்.

"சேதன உரம் என்ற பெயரில் ஆளும் தரப்பு எடுத்த நடவடிக்கையால் முழு நாடும் இன்று பற்றி எரிகின்றது. ஆட்சித் தலைவர்கள் தமது முட்டாள்தனமான முடிவுகளினால் இன்று நாட்டையே தீக்கிரையாக்கியுள்ளனர்" என்று அவர் சுட்டிக்காட்டுவது முற்றிலும் உண்மை. அத்தோடு அவர் கூறும் இன்னொரு விடயமும் கவனிக்கப்பட வேண்டும்.

"உரப் பிரச்சினை காரணமாக விவசாய நிலங்கள் தீயில் எரிகின்றன. விவசாயிகளின் வயிறும் பற்றி எரிகின்றது. மக்களின் அன்றாட வாழ்வும் எரிகின்றது. ஏன் சமையலறைகளே தீப்பற்றி எரியும் நிலைமை. தங்களின் முட்டாள்தனமான முடிவுகளினால் நாட்டையே தீக்கிரையாக்கியுள்ளனர்." – என்று அவர் சுட்டிக் காட்டுவது முற்றிலும் உண்மை. அத்தோடு அவர் கூறும் இன்னொரு விடயமும் கவனிக்கப்பட வேண்டும்.

"ஜனாதிபதி அதிகாரிகளைத் திட்டுவதில் அர்த்தமில்லை. ஜனாதிபதியின் முடிவுகளினாலேயே நாட்டில் இவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டுள்ளது. " – என்றும் அவர் கூறுகின்றார்.

சேதன உரப் பாவனைக்கு மட்டுமே அனுமதி என்ற கொள்கையை முடிவைப் 'பிடிச்சுறாவி'த்தனமாக ஜனாதிபதி கோட்டாபய கையில் எடுத்தபோதே நாடு வரலாற்றில் இல்லாத உணவுத் தட்டுப்பாட்டையும், பஞ்சத்தையும், அவற்றால் மிக மோசமாக பொருளாதார நெருக்கடிகளையும் எதிர்கொள்ள வேண்டிய அவலம் நேரும் என்பது நிபுணர்கள், புத்திஜீவிகளால் கூறப்பட்டது. ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்து செய்தி வெளியிட்டன. சுமார் ஓராண்டுக்கு முன்னர் இப்பத்தியில் நாம் கூட அதனைச் சுட்டியிருந்தோம். எல்லாம் தெரிந்தும் – இப்படியாகும் என்று சூழவிருந்தோர் எச்சரித்தும் – தனது இராணுப்பாணி அணுகுமுறையாலும், தனக்கு நெருக்கமான இராணுவ அதிகாரிகள் குழாமின் எதேச்சாதிகார அணுகுமுறை நடவடிக்கைப் பண்பாலும், முட்டாள்தனமான முடிவை எடுத்து, நாட்டின் விவசாயத்துறையையே நொண்டப் பண்ணி, வினையை விலைக்கு வாங்கி, நாட்டுக்கு அர்ப்பணித்திருக்கின்றார் நம் அதி உத்தமர். எல்லாம் நம் நாட்டின் தலைவிதிதான்...!

# டொலர்களுக்காக ராஜபக்ஷ அரசு வெளிநாடுகளில் பிச்சை எடுக்கிறது!



### எதிர்க்கட்சி சாட்டை

அரசின் இயலாமையை மூடிமறைக்கவே அமைச்சுக்களின் செயலாளர்களை ஜனாதிபதி, மாற்றியமைக்கின்றார் என ஐக்கிய மக்கள் சக்தி குற்றம் சாட்டியுள்ளது.

ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க, இந்த நாட்டுக்கு மக்கள் இந்த மாற்றத்தை எதிர்பார்க்கவில்லை எனக் குறிப்பிட்டார்.

நாட்டு மக்கள் மூன்று வேளை உண்ண முடியாத நிலைக்கு வந்துள்ள நிலையில் அரசாங்கம் டொலர்களுக்காக வெளிநாடுகளில் பிச்சை எடுக்கின்றது எனக் குற்றம் சாட்டினார். நாடு சுதந்திரமடைந்த பின்னர் ஆட்சி செய்த எந்தவோர் அரசாங்கமும் வெளிநாடுகளுக்குச் சென்று டொலர் பிச்சை எடுத்ததில்லை என்றும் அசோக அபேசிங்க சுட்டிக்காட்டினார்.

# தமிழ் உணர்வாளர் அமைப்பின் தலைவர் மோகனுக்கு 12 ஆம் திகதி வரை மறியல்



பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட மட்டக்களப்பு தமிழ் உணர்வாளர் அமைப்பின் தலைவர் கணபதிப்பிள்ளை மோகனை எதிர்வரும் 12 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற மேலதிக நீதிவான் கருப்பையா ஜீவராணி காணொலி மூலம் இந்த உத்தரவையிட்டுள்ளார்.

இணையத்தளங்களில் தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பின் படங்களைப் பதிவு ஏற்றியமை தொடர்பான குற்றச்சாட்டின் பேரில் கடந்த மே மாதம் 3 ஆம் திகதி தமிழ் உணர்வாளர் அமைப்பின் தலைவர் கணபதிப்பிள்ளை மோகனை ஏறாவூர் பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு அழைத்தனர்.

பின்பு பொலிஸ் நிலையத்தில் வைத்து ஏறாவூர் பொலிஸார் பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவரை ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றத்தில் முன்னிறுத்தியதையடுத்து அவர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற மேலதிக நீதிவான் முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது கொவிட் காரணமாக நீதிமன்றத்துக்கு அழைத்து வரமுடியாத காரணத்தால் காணொலி மூலம் அவரைத் தொடர்ந்து எதிர் வரும் 12 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# திருகோணமலை ஈஸ்வரபுரம் பொது மைதானம் தனிநபர் ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராட்டம்!



திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட ஈஸ்வரபுரம் மற்றும் மேரிக்கிராமம் ஆகிய பகுதிகளில் வசித்து வந்த பொதுமக்கள் பயன்படுத்திய பொது மைதானம் இரவோடு இரவாக தனிநபர் ஒருவரால் ஆக்கிரமிக்கப்பட்டமையை எதிர்த்து குறித்த கிராம மக்களால் கடந்த புதன்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

கடந்த 2015 ஆம் ஆண்டு தேசிய வீடமைப்பு அதிகார சபையால் புதிதாக குடியேறுவதற்காக குறித்த மாதிரிக் கிராமம் முன்மொழியப்பட்டு அங்கே வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டு தற்போது அங்கே 60 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன எனத் தெரிவித்தனர்.

குறித்த கிராமத்தில் பொதுத் தேவைகளுக்காக ஒன்றுகூடல் மற்றும் விளையாட்டு நிகழ்வுகளை நடத்துவதற்காக தம்மால் இவ்வளவு காலமும் பயன்படுத்தப்பட்ட குறித்த காணிப் பகுதி திடீரென ஒருவரால் ஆக்கிரமிக்கப்பட்டு அங்கே எல்லைக் கற்கள் நடப்பட்டமையை அடுத்து இந்த விடயம் தொடர்பாக தாம் பிரதேச செயலாளரிடமும் கிராம சேவகரிடமும் அறிவித்த போதிலும் தமக்கு சரியானதொரு பதில் கிடைக்கவில்லை என்பதால் இது அதிகார மட்டங்களில் இருப்பவர்கள் தமது சுய அதிகாரத்தைப் பயன்படுத்தி தன்னிச்சையாக செயற்படுகின்றார்கள் எனத் தெரிவித்து இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

மேற்படி காணிப் பகுதியில் சிறுவர் பாடசாலை மற்றும் விளையாட்டு மைதானம் ஒன்றும் அமைப்பதற்கான முன்னாயத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் கடந்த வருடம் ஏற்பட்ட கொரோனா பேரிடர் காரணமாக அந்த முயற்சி தடைப்பட்டதாகத் தெரிவித்தனர்.

இந்த நிலையில் மேற்படி காணி பிறிதொருவருக்கு கொடுக்கப்பட்டமை தம்மை வேதனைக்கு உள்ளாக்குகிறது எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதனைக் கவனத்தில் கொண்டு தமது விளையாட்டு மைதானத்தினையும் பொது ஒன்றுகூடல்களை முன்னெடுப்பதற்காக தம்மால் பயன்படுத்தப்பட்ட காணியை மீட்டுத்தருமாறும் குறித்த கிராம வாசிகள் கோரிக்கை விடுத்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கையின் அபிவிருத்தி முயற்சிகளுக்கு சவுதி நிதியம் தொடர்ந்து ஆதரவளிக்கும்!

## அந்நாட்டு பிரதான நிறைவேற்று அதிகாரி உறுதி



அபிவிருத்திக்கான சவுதி நிதியத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி சுல்தான் அப்துல்ரஹ்மான் அல் - மர்ஷாட் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்தார்.

இலங்கையின் அபிவிருத்தி திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு சவுதி அரேபிய அரசாங்கம் மற்றும் அபிவிருத்திக்கான சவுதி நிதியம் வழங்கிவரும் நெருக்கமான ஒத்துழைப்பை நினைவு கூர்ந்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இருநாட்டு அரசாங்கங்களுக்கும் இடையே தொடர்ச்சியாக காணப்படும் ஒத்துழைப்பிற்கும், நட்புக்கும் தனது நன்றியையும் தெரிவித்தார்.

அபிவிருத்திக்கான சவுதி நிதியத்தின் ஆதரவுடன் இந்நாட்டின் அபிவிருத்தி செயற்பாடுகள் 1981ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டன. அன்று முதல் கடந்த நான்கு தசாப்த காலங்களாக இந்நாட்டின் பல அபிவிருத்தித் திட்டங்களுக்கு இந்நிதியம் பங்களிப்பு செய்துள்ளது.

குளியாபிடிய வயம்ப பல்கலைக்கழக நகர அபிவிருத்தி திட்டமும் அபிவிருத்திக்கான சவுதி நிதியத்தின் கடனுதவியின் கீழ் கடந்த 27 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் பிரதமர் இணைய தொழில்நுட்பம் ஊடாகக் கலந்து கொண்டார்.

பிபில முதல் செங்கலடி வரையிலான 86.7 கிலோமீற்றர் வீதி அபிவிருத்தி திட்டமும் அபிவிருத்திக்கான சவுதி நிதியத்தின் நிதியுதவியின் கீழ் செயற்படுத்தப்பட்ட திட்டமாகும்.

குளியாபிடிய மற்றும் செங்கலடியில் நடைபெற்ற இரண்டு நிகழ்வுகளிலும் அபிவிருத்திக்கான சவுதி நிதியத்தின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

எதிர்கால முன்னுரிமை தொடர்பாகக் கவனம் செலுத்துகையில் குறிப்பாக கிராமிய பிரதேசங்களின் சிறு நீர்ப்பாசனம், கிராமிய நீர் வழங்கல் மற்றும் எதிர்கால வீதி அபிவிருத்தி தொடர்பான திட்டங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அபிவிருத்திக்கான சவுதி நிதியத்தின் பிரதிநிதிகளிடம் இதன்போது வேண்டுகோள் விடுத்தார்.

# யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை முன்னாள் அதிபருக்கு சேவை நயப்பு

யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையின் முன்னாள் அதிபர் நாகராசா மகேந்திரராசாவுக்கு சேவை நயப்பும் பாராட்டு விழாவும் நடைபெற உள்ளன.

கல்லூரி முதல்வர் பே.தனபாலசிங்கத்தைக் காப்பாளராகக் கொண்டு,ஆசிரியர் நலன் புரிக் கழகத் தலைவர் திருமதி இ.சுதானந்தராஜா தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வின் சிறப்பாக அதிபரை கௌரவிக்கும் நிகழ்வும் நடைபெறும்.

# வடக்கு இளைஞர் விவகார அலகின் புத்தாண்டு சிறப்பு நிகழ்ச்சி ஏற்பாடு

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகால் புத்தாண்டு தினமான முதலாம் திகதி பிற்பகல் 1 மணியிலிருந்து 9மணி வரை இணையம் ஊடாக "சிகரம் தொடு ஊக்கவுரை" நடைபெற உள்ளது

பன்னாட்டு புகழ் பெற்ற இலங்கை வானொலியின் அறிவிப்பாளரும் மேடை நாடக மற்றும் திரைப்பட நடிகருமான ஒலி ஊடகத் துறையில் 53 ஆண்டுகளும் வானொலித் துறையில் 60 ஆண்டுகளும் அனுபவம் மிக்க பி.எச்.அப்துல் ஹமீட் உரையாடவுள்ளார்

# பூநகரி பொலிஸ் நிலையத்துக்கு புதிய பொறுப்பதிகாரி நியமனம்



கிளிநொச்சி – பூநகரி நிலையத்துக்கான புதிய பொலிஸ் பொறுப்பதிகாரி கடந்த புதன்கிழமை தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

கொழும்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் பொலிஸ் பரிசோதகராகக் கடமையாற்றிய எல்.ஜி.என். அசிர, கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பொலிஸ் நிலையத்துக்கான புதிய பொலிஸ் பொறுப்பதிகாரியாகப் பொறுப்பேற்றுள்ளார்.

குறித்த பொலிஸ் பொறுப்பதிகாரி கடந்த புதன்கிழமை சுப நேரத்தில் உத்தியோகபூர்வமாகக் கடமை ஏற்றார்.

சர்வமத வழிபாடுகளைத் தொடர்ந்து பதவி ஏற்பு நிகழ்வு நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனை கடற்கரைப் பள்ளிவாசல் 200 ஆவது கொடியேற்ற விழா கூட்டம்



கல்முனை கடற்கரைப் பள்ளிவாசல் நாஹூர் ஆண்டகையின் 200 ஆவது கொடியேற்ற விழா எதிர்வரும் ஜனவரி 04 ஆம் திகதி ஆரம்பமாக இருப்பதை முன்னிட்டு அது தொடர்பான விசேட கூட்டம் கல்முனை மாநகர சபை முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றக்கீப் தலைமையில் கல்முனை மாநகர சபையில் இடம்பெற்றது.

200 ஆவது கொடியேற்ற விழாவை இம்முறை சிறப்பாக அரச விழாவாகக் கொண்டாடுவதற்கு இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டமையுடன், 200 ஆவது நினைவாக நினைவு முத்திரை ஒன்றை எதிர்வரும் ஜனவரி 06 ஆம் திகதி வெளியிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்படி முத்திரை வெளியீட்டு நிகழ்வுக்கு திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸின் அழைப்பின் பேரில் வெகுசன ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகபெரும கலந்து கொண்டு உத்தியோகபூர்வமாக முத்திரையை வெளியிட்டு வைக்கவுள்ளார்.

கல்முனையில் பாரம்பரியமாக நடைபெற்றுவரும் இந்தக் கலாசார முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்விற்கு கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட சகல வர்த்தகர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் என சகலரும் ஒத்துழைப்புக்களை வழங்குமாறு கல்முனை மாநகர சபை மேயரால் உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுக்கப்பட்டதோடு இந்த விழா சிறப்பாக நடைபெறுவதற்கு விசேடமாக குழு ஒன்றும் முதல்வரால் நியமிக்கப்பட்டது.

இந்த நிகழ்வுக்கு கல்முனை மாநகர சபை உறுப்பினர்களான எம்.எஸ்.எம்.நிசார்(ஜே.பி.),ஏ.சி.ஏ.சத்தார்,சட்டத்தரணி ஏ.எம்றோசன் அக்தர்,ஏ.ஆர் அமீர், எம்.நவாஸ்,கல்முனை பிரதேச செயலாளர் ஜே. லியாக்கத் அலி,கல்முனை மாநகர சபை ஆணையாளர் எம்.சீ.அன்சார்,கணக்காளர் ஏ.எச்.தஸ்தக்கீர்,கல்முனை ஜும்மா பள்ளிவாசல் மற்றும் கடற்கரைப் பள்ளிவாசல் தலைவர் டாக்டர் எஸ்.எம்.ஏ.அஸீஸ், நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் அவர்களின் பிரத்தியோக செயலாளர் நௌபர் ஏ.பாவா,இணைப்பாளர் எம். ஆஸீர் உட்பட பள்ளிவாசல் நிர்வாகிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# ஒமிக்ரோனால் பாதிக்கப்பட்டோர் தரவுகள் சர்வதேச தளங்களில் உறுதியாகவில்லை



கடந்த வாரம் மூன்று பேர் ஒமிக்ரோன் மாறுபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர் என மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் வெளிப்படுத்தியுள்ளது.

இருப்பினும் சர்வதேச தரவுத்தளங்களில் தகவல் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை என சுகாதார நிபுணர்கள் சங்கம் கூறுகிறது.

எனவே இந்த விடயம் தொடர்பாக சுகாதார அமைச்சு உரிய கவனம் செலுத்த வேண்டும் என அச்சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் குறிப்பிட்டுள்ளார்.

ஆய்வகத்தின் தரத்தை அங்கீகரிக்காததால் இது ஏற்படக்கூடும் எனத் தெரிவித்த அவர், இதனைத் தொடர்ந்தும் கண்காணித்து வருகிறேன் எனத் தெரிவித்தார்.

நீண்டகால அங்கீகாரம் பெற்றுள்ள ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஆய்வகத்துடன் சோதனை நடத்துவது மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.





சுயதொழில் பெண் முயற்சியாளர்களுக்கான வாழ்வாதார உதவியாக தையல் இயந்திரம் வழங்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை (28.12.2021) தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் AVR அறக்கட்டளையினரின் பங்கேற்புடன் இடம்பெற்றது.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அங்கம் - 237

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

### 609. அந்த நல்லாட்சியும் நல்லெண்ணங்களும் சிங்கள பெரும்பான்மையால் தூக்கி வீசப்பட்டு மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் கோட்டாவின் அரசு நிறுவப்பட்டுள்ளதா?

எதனை இரகசியமாகப் பேசினாலும், அதனை ஒருநியாயத்தின் அடிப்படையில் ஒருசிங்களத்தரப்புஏற்றுக்கொண்டாலும், சிங்கள பெரும்பான்மை அதனை நடைமுறைப்படுத்த விடாது. பண்டாரநாயக்க - செல்வநாயகம் காலங்களிலிருந்து அந்தப் புரிந்துணர்வு தமிழ்த் தலைவர்களுக்கு உண்டு. ஆனாலும் தங்களது அரசியல்தோற்றங்களைத்தக்கவைத்துக் கொள்ளக் குண்டுச்சட்டிகளில் குதிரைகள் ஓட்டிக் கொண்டே வருகிறார்கள்.

விடுதலைப் போராளிகளையோ, அவர்களது வன்முறையான போராட்டங்களையோ, சம்பந்தன் ஆதரித்தது கிடையாது. அதனைசன்சோனிஆணைக்


யோகர் சுவாமிகள்

குழுவிற்கு முன்னான தனது சாட்சியத்தில் தெளிவாகவே தெரிவித்திருந்தார். இந்திய ஒப்பந்தத்தை ஒட்டியும் சிங்கள பெரும்பான்மையின் ஆதரவு இன்றி எந்த விதமான அடக்கு முறைகளாலும் இனப்பிரச்சினைக்குநிரந்தரத்தீர்வுகண்டுவிட முடியாது என்ற போக்கையே வெளிப்படுத்த வந்தவர், பெரும்பான்மையோடு சமரசம் தேவை என்பதை வலுப்படுத்தியவர். சந்திரிகாவின் தீர்வுத் திட்டத்தில் நியாயமானஅதிகாரப்பரவல்இருந்ததென இன்று சொல்வதை அன்று ஒரு திராணியுடன்மக்களுக்கும்விடுதலைப்புலிகளுக்கும் விளக்கியிருந்தால் பின் வந்த பாரிய அழிவுகளும் இனப்படுகொலைகளும் நடந்திராமல் போயிருக்கலாம். பின் விடுதலைப் புலிகளின் ஆதரவுடன் கூட்டமைப்பின் தலைவரானார். அவர்கள் இருந்தவரை கூட்டமைப்பின் தலைவராக நோர்வேயில் கைசாத்திடப்பட்ட சமஷ்டி முறையில் தீர்வை நோக்கி நகர்த்தும்படிபிரபாகரனைநிர்ப்பந்தப்படுத்தவில்லை. போர் நடந்த போது இவை விடுதலைப் புலிகள் தேடிக்கொண்டவை என்று மனபோக்கிலேயே காய்கள் நகர்த்தப்பட்டன.

13ஆம் சரத்திலுள்ள மாகாணத்திற்கான பொதுவான அதிகார கட்டமைப்புக்களைத்தான்விலாவாரியாக தனித்தனியாக சம்பந்தன் கூறுகிறார். ஆனால் தொடங்கிய பிரச்சினையே அன்றிருந்த அரசமைப்பின் கீழ் ஜனாதிபதி ஜே.ஆர் சர்வ அதிகாரம் கொண்டிருந்தமையால் தனது அதிகாரங்களைத்தான் நியமிக்கும் மாகாண ஆளுநர் ஊடாக பகிர்வேன், அதனைமற்றஎல்லாமாகாணங்களுக்கும் செய்கிறேன், அது போல தான் வடகிழக்கு மாகாணங்களுக்கும் என நியாயப்படுத்தியது தான்.

அவை நிவர்த்திக்கப்படும் முன் வன்முறைகளும் அதிகாரங்களும் போரும் காலங்களைக் கடத்தி இனப்படுகொலைகளில் முடிந்தன.

நல்லாட்சி காலங்களில் ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டன. வல்லரசுகள் பின்னணியில் நல்லெண்ணங்களுடன் நின்றன. ஆயின் உத்தேச அரசமைப்புக்கான ஆராய்வுக் கூட்டங்களில் சம்பந்தன் விவரித்தது போல மீளப்பெறமுடியாத அதிகாரங்களோ, அவர் விலாவாரியாக விவரித்தவையின் மேலான அதிகாரப்பரவலோ ஏற்றுக் கொள்ளப்படவில்லை. சிங்கள பெரும்பான்மை மட்டுமல்ல, சிங்கள பெரும்பான்மையே எதுவும் பிரிக்கப்படாத, பிரிக்கமுடியாத, ஒருமித்தநாட்டுக்குள்தான் கூடிய அதிகாரங்கள் என நிர்ப்பந்தித்தது.

அந்தப் பேச்சுவார்த்தைகளையே, இனவெறியைத் தூண்ட வசமாகப் பாவித்து, நல்லாட்சியை விரட்டி, கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்கி, அவருக்கு ஜே.ஆருக்கு இருந்த அதிகாரங்களிலும் கூட 20ஆம் திருத்தால் கொடுத்து, "ஒரு நாடு; ஒரு சட்டம்" அமைக்க கடமைப்படுத்தியுள்ளார்கள் பெரும்பான்மையினர்.

இந்த பெரும்பான்மைக்கு எதிராக சம்பந்தன் எடுக்கும் புதிய அரசமைப்பிற்கான சவால்கள் பேச்சு வார்த்தைகளால் எவ்வளவு இரகசியமானாலும் எந்த அதிகாரங்களை சுயாட்சியாக பெற்று தரும்? இப்படியானதமிழ்மக்களின்அரசியலைப் பார்க்கும் போது கண்ணதாசன் "வளர் பிறை" என்ற படத்திற்காக எழுதி சௌந்தரராஜன் பாடி வெகுவாக பாராட்டப்பட்ட பாடல். நினைவுக்கு வருகிறது.

பூஜ்ஜியத்துக்குள்ளே ஒரு
ராஜ்ஜியத்தை ஆண்டுகொண்டு
புரியாமலே இருப்பான் ஒருவன் –
அவனைப்
புரிந்துகொண்டால் அவன்தான்
இறைவன்.

முற்றும் கசந்ததென்று
பற்றறுத்து வந்தவர்க்கு
சுற்றமென நின்றிருப்பான் ஒருவன்
- அவனைத்
தொடர்ந்து சென்றால் அவன்தான்
இறைவன்

தென்னை இளநீருக்குள்ளே
தேங்கியுள்ள ஒட்டுக்குள்ளே
தேங்காயைப்போலிருப்பான் ஒருவன்
- அவனைத்
தெரிந்து கொண்டால் அவன்தான்
இறைவன்.

கோழிக்குள் முட்டை வைத்து
முட்டைக்குள் கோழி வைத்து
வாழைக்கும் கன்றுவைத்தான்
ஒருவன் - அந்த
ஏழையின் பேர் உலகில் இறைவன்
- என்பது அப்பாடல் வரிகள்

1987 இல் ஒப்பந்தத்தை ஏற்படுத்தி, சிங்கள பெரும்பான்மையின் எடுத்த எடுப்பிற்கெல்லாம் விட்டுக் கொடுத்து, சமஷ்டி எனும் சொல்லே இல்லாமல், மாநில அரசாக இந்தியாவின் மாநிலங்களுக்கிருந்த அதிகாரங்களோடு வடகிழக்கை ஒரு மாகாணமாக நிர்வகிக்க ஏற்பாடுகள் செய்தது இந்தியா. அதனை அமைத்த பின், அதன் நிர்வாக குறைபாடுகளைக் காலவோட்டத்தில் இந்தியாவின் ஆதிக்கத்தில் பெரும்பான்மைக்கு எதிராக களைந்திருக்கலாம். அதனைப் பெரும்பான்மை ஏற்காத நிலையில் சாம, பேத, தான, தண்டத்தை அமுல்படுத்துவது இந்தியாவினது கடமையாக இருக்கும். அதனைப்புரிந்துகொண்டிருக்கவேண்டும்.

அந்தக் காலத்தில் பெரும்பான்மையால்தமிழ் மக்கள் முற்றும் கசந்ததென்று பற்றறுத்துச் சென்று நின்றார்கள். இந்தியா சுற்றமென வந்து நின்றது. ஆனால் தமிழ் மக்களை அதனைத் தொடர்ந்து செல்ல விடப்படவில்லை. ஞானம் காலம் கடந்தும் வரலாம்.

### 610. இந்தத் தத்துவத்தில் இந்தியாவுடன் கூடச் சென்றிருந்தால் தமிழ் மக்கள் சுயாட்சியை கண்டிருப்பார்களா?

கண்ணதாசன் கூறிய ஒரு தத்துவத்தைச் சுட்டிக் காட்டினேன். ஞானிகள் பலர் இப்படியான தத்துவங்களை எமது வாழ்வுகளை சீர்படுத்த - மேம்படுத்த - என்று அருளியிருக்கிறார்கள். அவற்றைத் தொடர்ந்தால் கடவுளைக் காண்பது நிச்சயமா என்று கேட்டால் எனது சிறிய அறிவைக் கொண்டு இந்த விசாலமான தத்துவ ஞானத்தை எப்படி விளக்குவது?

இராமகிருஷ்ணரை இளைஞர் நரேந்திரன் குருவாக காணும் வரை, அவர் போன இடங்களிலெல்லாம் - கோவில்களில் கூட - தனக்குக் கடவுளைக் காட்ட முடியுமா? - என்று தான் தர்க்கித்தார். பின்னர் இராமகிருஷ்ணனைக் குருவாக ஏற்றதும் அவர் மூலம் கடவுளைக்


விவேகானந்தர்

கண்டோ, அறிந்தோ, உணர்ந்தோ சுவாமி விவேகானந்தராக உயர்ந்தார். யாழ்ப்பாணத்தில் இருந்த யோகர் சுவாமிகளிடம் தமிழ் மக்களது நிலைமை பற்றி கேட்டிருந்தால் "போடா அது எப்பவோ முடிந்த காரியம்" எனத்தான் பதில் சொல்லியிருப்பார். இன்றைய நிலையில் நடக்கின்ற ஆய்வுகூட்டங்களில் ஒன்றுக்கு அவரை அழைத்து அபிப்பிராயம் கேட்டால் "சும்மா இரு; நடப்பது நடக்கும்" என்று சொல்லக் கூடும்.

இந்தியாவின் பழைய சரித்திரங்கள், பின் அதன் சுதந்திரப் போராட்டம் என பவை பெரும் கடல். அவற்றின் ஆழங்களும் தத்துவங்களும் அளவிடமுடியாதவை. இதில் இந்தியாவின் தமிழ் மக்கள் திமிங்கிலங்களாக உலாவினார்கள். இன்று வகுக்கப்படும் இந்தோ - பசுபிக் பிராந்தியத்தைத் தன் கட்டுக்குள் கொண்டுவரராஜராஜசோழன்கடற்படைகள், ஆளுநர் கள், பிரதிநிதிகளும் வைத்து


சம்பந்தன்

வெற்றியும்கண்டான். சுதந்திரபோராட்டத்தில் கட்ட பொம்மன், செங்கை அரசர்கள், பின் பாரதியார்வாஞ்சிநாதன்வ.உ.சிதம்பரபிள்ளை (கப்பலோட்டியதமிழன்), ராஜாஜி, டாக்டர் ராதாகிருஷ்ணன் என்று பலர். அவர்கள் அறிவு சார்ந்து, எல்லோரும் இந்தியா என்றதேசத்தில்மாநிலங்களாகஇணைந்து வாழ இணங்கினார்கள். அங்கு எழுந்த தலைமைகளின் பரந்த நோக்கு வேறு.

ஆனால், இங்கோ இலங்கையின் கடற்பரப்பில் கூட தமிழ் மக்கள் இன விகிதாசாரத்தில் சிறிய மீன்களாகத்தான் நீந்தித்திரிந்தார்கள். அந்த இனவிகிதாசாரத்தையே வாக்குகள் என்ற அடிப்படையில் குறைத்து, நாடாளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றி, அதனைப் பெரும்பான்மையின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதுதான் சிங்கள தலைவர்களின் திட்டமாக இருந்தது. மலையக மக்களின் வாக்கைப் பறித்ததும், பின் தமிழ்ப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களைத் திட்டமிட்டு ஏற்படுத்தியதும், இந்த வாக்கு வங்கிகளின் மனப்பான்மையிலேயே. அதன் தொடர்கதையாக 1987இன் ஒப்பந்தம் வந்தது .13ஆம் திருத்தமும் வந்தது. தமிழ் பிரதேசங்கள் என்ற கோட்பாடும் வரையப்பட்டது.

விடுதலைப் புலிகள் சுதந்திர தமிழ் ஈழம்தான் என்று பலத்துடனும் அர்ப்பணிப்புகளுடனும்பாய்ந்தார்கள். ராஜராஜசோழனுக்கு பின் தமிழன் என்ற அடையாளத்தை - அவனின் தீரங்களை - வீரங்களை - உலகெங்கும் பிரபாகரன் பதித்தார். சர்வதேசத்துடன் ஒத்துப்போக வேண்டிய அணுகுமுறைகளைக் கணக்கெடுக்காது வல்லரசுகளையே பகைத்தமை கடைசியில் மண்புழுக்கள் திமிர் கொண்டாடிய கதையாக முடிந்தது. 13ஆம் திருத்தத்தையே கேள்விக் குறியாக்கியுள்ளது. சுதந்திர காலத்திலிருந்து இவ்விடயங்களை உணர்ந்த ஒரு நாடு என்று இணங்கி அரசியலை நடத்தயிருக்கவேண்டுமா? ஒப்பந்தத்தை அனுசரித்து முன்னேறியிருக்க வேண்டுமா?அல்லது தோற்றவர்களாகக் கையேந்தி வாழ்வைத் தொடர்வதா என்பதுதான் இந்தத் தத்துவங்களிலிருந்து புரிந்து கொள்ள வேண்டியது.

(வளரும்)



# சூனியத்தை நோக்கி...



என்.சத்தியமூர்த்தி

அக்கரை / அக்கறை அலசல்

இனப்போர் முடிந்து பத்து ஆண்டுகள் முடிந்தே இரண்டு ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. மிதவாதம் இல்லையென்றால் பயங்கரவாதம் வழியில் போராடியே தனி நாடு பெற முடியும் என்ற கனவும் கூட கானல் நீராகி விட்டது. அதனை எண்ணி, நம்பி, போர்க்களத்தில் குதித்த அன்றைய இளைய தலைமுறை ஆண்களுக்கும் பெண்களுக்கும், கன்னத்தில் குழி விழுந்ததோ இல்லையோ, அவர்களது தலைமுடியில் நரை தோன்றி, படர்ந்து வருகிறது. அவர்களில் எஞ்சியவர்கள், மிஞ்சியவர்கள் எங்கே போனார்கள் என்று தெரியவில்லை. ஆனால் அவர்களது பெயரை சொல்லி, தமிழர் தரப்பு அரசியல் மட்டும் இன்னமும் அமோகமாக அரங்கேறி வருகிறது.

தமிழர் அரசியல் போராட்டம் சிங்களம் மட்டுமே என்ற 1956 ஆம் ஆண்டின் அரச முடிவில் துவங்கியது அல்லது சூடு பிடித்தது எனலாம். தமிழ் இனத்தை பொறுத்தவரை, அரச பணியே நிரந்தரமானது, நிரந்த வருமானத்தை பெற்றுதரக் கூடியது, எனவே பெருமை மிக்கது என்ற எண்ணம் இருந்தது. 'கோழி பிடிக்கிற வேலையானாலும் கொவர்ண்மென்ட் வேலையாக இருக்கோணும்' என்ற பேச்சு வழக்கு இந்தப் பின்னணியில்தான் தோன்றியது.

அது வரை அனைத்து வகையான அரச பணிகளிலும் தமிழர் பங்களிப்பு அளப்பரியது. அது இல்லாமல் போய் விடுமோ என்ற பயம் காரணமாக, மொத்த தமிழ் இனமும் 1956 இல்தான் ஒரு சேர கொதித்து எழுந்தது. இதனைத் தொடர்ந்து, எழுபதுகளின் முன் பகுதியில் துவங்கி, பின்னர் கைவிடப்பட்ட மாவட்ட ரீதியான தரவரிசை (Standardization) யாழ்ப்பாணத்தில் கற்றுத் தேர்ந்த பள்ளி மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து படிப்பதற்கும் ஆப்பு வைத்தது. இதனால். யாழ் மாணவர்கள் மட்டுமல்லாமல், தற்போதைய வட மாகாணம் முழுவதும் மற்றும் கிழக்கு மாகாணத்தின் தமிழ் பேசும் முஸ்லிம் மாணவர்களும் பாதிக்கப்பட்டனர்.

இது தவிர ஐம்பதுகள் துவங்கி, போராடும் தமிழ் இளைஞர்களை தேசத்துரோகிகளாக சித்திரித்து. தமிழர் பகுதிகளில் அவர்களை வேட்டையாடும் ஒட்டு மொத்த அரசு இயந்திரமும், மென்மேலும் தமிழ் இளைஞர்களை புதிதுபுதிதாக தோன்றிய போராளி குழுக்கள் பக்கம் தள்ளியது. அன்று அவர்கள் இழந்த கல்வி, இன்று அவர்களில் பலரது குழந்தைகளுக்கும் கூட கிடைக்கவில்லை என்பதே உண்மை. இதனையும் தாண்டி உயர்கல்வி பெற்று நல்ல வேலைகளை பெற்று, சிறப்பாக வாழ்பவர்கள், இங்கே, இலங்கையில் வாழவில்லை. கனடா, ஆஸ்திரேலியா மற்றும் ஐரோப்பா ஆகிய உலகின் பிற பகுதிகளில் வாழ்கிறார்கள். அந்தந்த நாட்டு பிரஜாவுரிமை பெற்று, திருமணம் செய்து, அவர்களது குழந்தைகளும் அந்த நாடுகளிலேயே நிரந்தரமாக தங்கி விட்டார்கள்.

ஐம்பதுகளில் இனப்பிரச்சினையைக் காரணம் காட்டி வெளிநாடு சென்ற அன்றைய தமிழ் இளைஞர்கள் இன்று பேரன் – பேத்தியரை கூட அங்கேயே எடுத்து விட்டார்கள். இன்னும் சொல்லப்போனால், கஜேந்திர குமார் பொன்னம்பலம் போன்ற ஒரு சிலரை தவிர, அன்று தமிழ் இனத்தலைவர்கள் என்று மார்தட்டிக் கொண்டவர்களின் பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும் வெளிநாட்டுப் பிரஜைகள் ஆகி தசாப்தங்கள் பல சென்று விட்டன. ஏன், போர்க்காலத்தில் அவர்களில் பலரும் வெளிநாடுகளில் தங்குவதையே பெருமையாகவும், பாதுகாப்பாகவும் கருதினர். உள்நாட்டில் தங்களது



உயிருக்கான ஆபத்து எந்த திசையில் இருந்து வரலாம் என்பதை கூட யுகித்து அறிய முடியாத நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டிருந்தனர்.

### ஊருக்கு இளைத்தவன்..

சமகால உண்மை என்னவென்றால், 'ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி' என்று, இங்கேயே தங்கி, தங்களது உயிரையும் எதிர்காலத்தையும் தொலைத்து விட்ட அன்றைய தலைமுறையினரின் குடும்ப இளைஞர்கள், இன்று தேவைக்கான கல்வியறிவும், வேலைவாய்ப்புகளும் இல்லாமல், ஒரு சூனியத்தை நோக்கி பயணித்து வருகிறார்கள். அவர்களில் ஒரு பகுதியினராவது, வேலைவாய்ப்



புக் காரணமாக வெளிநாடுகளுக்கு செல்ல முடிகிறது என்பது தான் இன்றைய தமிழ் சமூகத்தின் பெருமை. உண்மையில், அதுவே எதிர்கால தமிழ் இனத்தை எதிர்நோக்கி இருக்கும் அவலமும் கூட.

ஆனால், இங்குள்ள தமிழ்த் தலைமைகள் என்ன செய்கின்றன? ஒரு காலத்தில் பழம் பெருமை பேசி, பெரும்பான்மைச் சிங்களவர்களைக் கடுப்பேற்றிய அவர்கள், இன்று போர்க்கால நிதர்சனங்களில் தொங்கி கொண்டு, இன்றைய இளைஞர்களை, தங்களது மந்திரப் பிடியினுள் பிடித்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அல்லது தங்களது முயற்சிகளைத் தொடர்கிறார்கள். தமிழ் மக்களின் உரிமை பற்றி பேசும் இவர்களில் எவருமே, அந்த சமுதாயத்திற்கான தங்களது சமகால கடமைகள் குறித்து ஒரு கண நேரம் கூட யோசித்து பார்ப்பதில்லை என்பதே வேதனைக்குரிய உண்மை.

போர் முடிந்த கடந்த பன்னிரெண்டு ஆண்டுகளில், தமிழ்த் தலைவர்களில் எத்தனை பேர், தமிழ் இளைய தலைமுறையின் கல்வி மற்றும் வேலை வாய்ப்பு குறித்து கருத்து தெரிவித்துள்ளனர்? எத்தனை முறை நாடாளுமன்றத்தில் இந்த பிரச்சினைகளைப் பேசி இருப்பார்கள்? இன்னும் சொல்லப்போனால், கடந்த 2013 முதல் ஐந்து ஆண்டுகள் வடக்கு மாகாணத்தில் பதவியில் இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முதல்வர் விக்னேஸ்வரனுக்கும், அவரது அமைச்சரவை சகாக்களுக்கும் தங்களது குடுமிபிடிச் சண்டைகளை போட்டு முடிவதற்கே நேரம் சரியாக இருந்தது. போதாதற்கு, கூட்டமைப்பு மற்றும் தமிழரசுக் கட்சியின் தலைமையுடன் உரசி மோதுவதற்கும், கொழும்பு அரச தலைமையுடனும் முட்டிமோதுவதிலுமே, விக்னேஸ்வரனுக்கு அதிக கவனம் இருந்தது.

இந்தக் காலகட்டத்தில், விக்னேஸ்வரனை தட்டிகேட்டு, சரியான பாதையில் வழிநடத்துவதற்கும் கூட்டமைப்பு தலைமையும் அங்கத்துவ கட்சிகளும் தவறி விட்டன. எப்போது, விக்னேஸ்வரன், தான் தமிழரசுக் கட்சி உறுப்பினன் அல்ல, மாறாகக் கூட்டமைப்பின் நேரடிப் பிரதிநிதி என்று கூறினாரோ, அப்போதே அந்த உரிமையும் கடமையும் அனைத்து அங்கத்துவக் கட்சிகளுக்கும் இருந்தது. இப்போது முண்டியடித்துக்கொண்டு, கூட்டமைப்புத் தலையின் பொறுப்புகளைச் செயலாற்ற முனைவோரும் அன்று வாளவிருந்தனர் என்பதும் வருத்தத்திற்குரியது.

### கள்ளத் தோணியில் போய்...

நேரடியாக சொன்னால், இன்று, தமிழ் இளைய தலைமுறையை நோக்கியுள்ள கேள்வியே இது தான்:– கள்ளத் தோணியில் போய் ஆஸ்திரேலியா சென்றடைய முடியுமா? என்பதுதான். முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் அண்டை நாடான இந்தியாவில் அகதிகளாக தஞ்சம் அடைந்தவர்களில் சிலரும் கள்ளத் தோணிக்கு தங்கள் வாழ்வை அவ்வப்போது அர்ப்பணிக்கத் தயாராகி வருகின்றனர் என்பதும் வேதனைக்குரியதே.

இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னரான முதல் தலைமுறையினர், விட்டகுறை தொட்ட குறையாக, முந்தைய காலனி ஆட்சியினரான இங்கிலாந்து தேசத்தில் தஞ்சம் புகுந்தவர்களாகத் தங்களை காட்டிக்கொண்டார்கள். பின்னர் வந்தவர்களோ, அந்த நாடுகளின் சட்ட திட்டங்களை நன்றாகக் கற்றறிந்து, கனடா அல்லது நோர்வே வரையில் செல்ல ரிஸ்க் எடுக்கவும் தயாராக இருந்தார்கள். சமகால நிலைவரங்களுக்குத் தகுந்தவாறு, அவர்கள் ஆஸ்திரேலியா செல்வதற்கே தற்போதெல்லாம் முயற்சிக்கிறார்கள்.

ஆனால், அன்றும் சரி, இன்றும் சரி, குறிப்பாக



ஐரோப்பிய நாடுகளில் முன்னெப்போதும் கேட்டு அறிந்திராத மொழிகளை படித்தறிய தயாராகும் நமது இளைஞர்கள், தாய் நாட்டில் அவ்வப்போதாவது கேட்ட சிங்கள மொழியைப் படிப்பதற்கு சீற்றம் கொள்வது ஏன் என்பதுதான் புரியாத புதிர். ஏன், ஆங்கில மொழியைக் கூட கற்றறியாத நமது இளைஞர்கள், அந்த மொழியை கூடக் கடினப்பட்டு கற்றறிவதை ஒரு சவாலாகவே ஏற்றுக் கொண்டு, அதில் வெற்றியும் பெற்று வருகின்றனர்.

இதிலெல்லாம் இன்னொரு வருத்தப்பட வேண்டிய விடயம் ஒன்று உள்ளது. கடந்த தசாப்தங்களில், கள்ளத் தோணியிலோ அல்லது அது போன்ற பிற வழிகளிலோ, மேலைநாடு சென்ற தமிழர்கள், அங்குள்ள குடியுரிமை கொட்டில்களில் வெயில் – பனி என்று பாராமல், மாதக் கணக்காக, வருடக் கணக்காக சிறை வாழ்வு வாழத் தயாராக இருக்கிறார்கள். அதன் பிறகு, அந்த நாடுகளில் தங்க இடமோ, குடியுரிமையோ கிடைக்கும் என்பதும் நிச்சயம் இல்லை. ஆனாலும், அந்த நிலையை அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள்.

### பொருளாதார அகதிகள்

இந்த பின்னணியில், இவர்கள் அனைவருமே, அந்த மேலை நாடுகளில் சுய பாதுகாப்பு கருதி, அரசியல் அகதிகளாக தங்களை ஏற்றுக் கொள்ளப்படுவதற்காகவே காத்திருக்கிறார்கள் என்பது அப்பட்டமான பொய். அன்றும் சரி, இன்றும் சரி, அவ்வாறு எதிர்பார்த்து வெற்றி பெற்றவர்களும் சரி, தோல்வியுண்டவர்களும் சரி, அரசியல் அகதிகளாக ஏற்றுக் கொள்வதற்கு தகுதி உடையவர்களா என்பதும் கேள்விகுறி.

உண்மை என்னவோ, அவர்களில் பலரும், பொருளாதார அகதிகளாக, தங்களுக்கும் கூட ஒரு வளமான வாழ்வை அமைத்துக் கொள்ளவே முயல்கிறார்கள் என்பதே நிதர்சனம். அவர்களை அந்த நாட்டுச் சட்டங்கள் தண்டிக்காதமை வரை, தனி மனிதர் எதிர்பார்ப்புகளை வைத்து நோக்கும் போது அவர்களது எதிர்பார்ப்புகளில்

(08ஆம் பக்கம் பார்க்க)

## சூனியத்தை நோக்கி...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)
எந்தவிதத் தவறு இருப்பதாகவும் கூற முடியாது. அவர்கள் பெயரில், அவர்களது தமிழ் சகோதரர்கள் தங்கள் வாழ்வை மேலை நாடுகளில் வளமாக்கி கொண்டமையே அவர்களுக்கான உந்துதலாகவும் காரணியாகவும் அமைந்து விட்டன.

தங்களது எதிர்காலத்தைப் பற்றியே சிந்திக்காத தமிழ் அரசியல்தலைமைகளுடன்கனகாலம் பயணித்து வந்துள்ளதமிழ் சமூகம், அவர்களை நம்பியே தங்களது எதிர் காலப் பொறுப்புகளை ஒப்படைக்கும் தேர்தல் விந்தை வேறு எங்கும் நடைபெற்ற சரித்திரம் இல்லை. ஆனால், இந்த இரு சாராரின் இடையிலே சிக்கித் தவிக்கும் இனப் பிரச்சினையின் எதிர்காலம்தான் என்ன?

**அண்ணன் எப்போ சாவான்...**

இதே பாதையில் பயணித்தால், இன்னும் சில வருடங்களில், தமது மக்களை அரவணைத்து, சிங்கள அரசியல் சமூகத்தின் மதிப்பையும், சர்வதேசத்தின் மரியாதையையும் பெற்றஒருதமிழ்அரசியல்தலைமை இல்லாமலே போகலாம். இன்று அரசியல் தலைமைப் பொறுப்பில் உள்ள எவருமே, தங்களது பிள்ளைகள் அல்லது, உறவினர்களை கூட அடுத்த தலைமுறை அரசியலுக்கு தயார் செய்யவும் இல்லை, முன்னிறுத்தியதும் இல்லை.

இதற்கு ராஜபக்ஷக்களே மேல். வேறொன்றும் இல்லை என்றாலும், தங்களது குடும்ப வாரிசுகளை அடுத்த தலைமுறை தலைமை பொறுப்புகளில் அமர்த்தி அழகு பார்ப்பதற்காகவாவது, அவர்கள் தங்களது சமூகத்தினரை அரவணைத்து, அவர்களது சமூக – பொருளாதார தேவைகளையும் எதிர்பார்ப்புகளையும் முன்னிறுத்தி, தங்களுக்கென்று ஒரு வாக்கு வங்கியைத் தயார் செய்து வைத்துள்ளார்கள. அதனைக் கூடத் தமிழ் தலைமைகள் செய்யவில்லை. காரணம், அவர்களில் பலரது குடும்ப வாரிசுகளும் கூட வெளிநாடுகளில் தங்களை ஐக்கிய படுத்திக்கொண்டு வருடங்களும் தசாப்தங்களும் உருண்டோடி விட்டன.

இவர்கள்அனைவரின்இடையே மாட்டிக்கொண்டுமுழிப்பது, தமிழ்த் தேசியமே. அல்லது, இனப்பிரச்சினை தான். இதனை நன்றாக அறிந்துணர்ந்த சிங்கள அரசியல் தலைமையும், கடந்த இரண்டு தசாப்தங்களாவது, 'அண்ணன் எப்போ சாவான், திண்ணை எப்போது காலியாகும்' என்று பிரபாகரனின் மறைவிற்காக காத்திருந்து அரசியல்செய்து வருபவர்கள். அவர்களது எதிர்பார்ப்புகளை நிறைவேற்றி வைக்கும் விதமாகவே, தமிழ் அரசியல் தலைமைகளும், தமிழ்சமுதாயமும்தொடர்ந்து முயற்சி செய்து வருகின்றன என்பதே மிகவும் வருத்தப்பட வேண்டிய விடயம்.

அந்த விதத்தில், தமிழ் இளைஞர்களின் எதிர்காலம் மட்டுமல்ல, தமிழ் இனத்தின் எதிர்காலமும், அதனை ஒட்டிய இனப்பிரச்சினைக்கான தீர்வுகளும் கூட ஒரு சூனியத்தை நோக்கியே தொடர்ந்து பயணித்து வருகின்றன. அந்த வகையில், இலங்கையை விட, நாட்டின் வெளியே அதிக தமிழ்க் குழந்தைகள் பிறப்பதும்வாழ்வதும்கூட எதிர்காலத்தில் நடக்கத்தான்போகிறது. அப்பொழுது, நாடுகடந்த தமிழர் இன அமைப்புகளே, உள்நாட்டின் தமிழ் அரசியல் தலைமைகளை விட நீட்சியும், சில விடயங்களில் மாட்சியும் பெற்றிருக்கும்!

# நிச்சயம் உணவுத் தட்டுப்பாடு வரும்

## பேராசிரியர் புத்தி மாரம்பே எச்சரிக்கை

நாட்டில் நிச்சயம் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் என பேராதனைப் பல்கலைக் கழகத்தின் விவசாய பீட பேராசிரியர் புத்திமாரம்பேஎச்சரிக்கைவிடுத்துள்ளார்.

பெரும்போகத்தில் வழமையான அறுவடையிலும் மூன்றில் இரண்டு பங்குகளே கிடைக்கப் பெறும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கிடைக்கப்பெறும் அறுவடையில் 25 வீதமானவற்றை விவசாயிகள் சொந்த நுகர்விற்காக களஞ்சியப்படுத்திக் கொள்வர் என அவர் தெரிவித்துள்ளார்.

பற்றாக்குறையாகும் உணவுப்பொருள்களைப் பெற்றுக்கொள்வதற்கு டொலர் பிரச்சினை காணப்படுவதால் நிலைமை மோசமாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

விவசாயிகளுக்கு மிகவும் அத்தியாவசியமாகத் தேவைப்படும் உர வகைகள் வழங்கப்படாமையால் உணவு உற்பத்தியில் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் விவசாய உற்பத்தி 30 முதல் 35 வீதம் வரையில் குறைந்தால் அது பாரிய பிரச்சினையாக உருவாகும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.



## மேயர் ரோஸி சேனநாயக்கவுக்கு 5 லட்சம் ரூபா வாடகைக் கார்!

கொழும்பு மாநகர சபையின் மேயர் ரோஸி சேனாநாயக்க, வாகனம் ஒன்றை வாடகைக்கு எடுப்பதற்காக மாதாந்தம் 5 லட்சம் ரூபாவை ஒதுக்க கொழும்பு மாநகர சபையால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை தான் பயன்படுத்திய உத்தியோகபூர்வ வாகனம் பழுதுபார்ப்பதற்காக அனுப்பப்பட்டுள்ளதாகவும், இதன் காரணமாக வேறு வாகனம் வாடகைக்கு எடுக்கப்படும் என்றும் மேயர் தெரிவித்தார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள், செலவுகளைக் குறைக்க வேண்டிய நிலையில், அதிக விலைக்கு வாகனங்களை வாடகைக்கு எடுப்பதை ஏற்கமுடியாது எனத் தெரிவித்தனர்.

இதனிடையே, எதிர்க்கட்சி உறுப்பினர்களின் நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்கிறேன் எனவும், மாற்று வழி இல்லாத காரணத்தால் தயக்கத்துடன் அதனை செய்ய நேர்ந்ததாகவும் கொழும்பு மாநகர சபையின் மேயர் தெரிவித்தார்.



## உலக சுற்றுலா அழகியாக இலங்கைப் பெண் தெரிவு

உலக சுற்றுலா அழகியாக இலங்கைப் பெண் நலிஷா பானு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

30 நாடுகளுக்கிடையில் நடைபெற்ற உலக சுற்றுலா அழகி போட்டியில் இலங்கைப் பெண் வெற்றி பெற்று கிரீடத்தை சுவீகரித்துக்கொண்டுள்ளார்.

குறித்த போட்டி நிகழ்வுகள் பிலிப்பைன்ஸில் நடைபெற்றன.

உலக சுற்றுலா அழகி போட்டியில் இதற்கு முன்னர் இலங்கைக்கு மூன்றாவது இடம் கிடைத்திருந்த நிலையில், கிரீடத்தை சுவீகரித்த முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

## அமைச்சர்கள் முன்னுதாரணமாக மக்கள் முன்பு திகழ்தல் வேண்டும்

### டலஸ் அழப்பெரும அறிவுரை



அமைச்சர்கள் முன்னுதாரணமாக திகழ வேண்டுமென ஊடக அமைச்சர் டலஸ் அழப்பெரும தெரிவித்துள்ளார்.

அரசாங்கஅதிகாரிகள், அமைச்சர்கள் அனைவரும் பொதுமக்களுக்கு முன்னுதாரணமாகச் செயற்பட வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் தாம் ஏனைய விடயங்களைக் கருத்திற் கொள்ளாது பல வாகனங்களை பயன்படுத்தினால் தமக்கு ஏதேனும் நோய் இருக்க வேண்டுமென குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர்கள் முன்னுதாரணமாக செயற்படாவிட்டால் அது பொதுமக்கள் மத்தியில் கோபத்தையே உருவாக்கும் என அவர் கொழும்பு ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டுள்ளார்.

## நிதி அமைச்சால் 4,300 கோடி ரூபா வருமானம் இழந்துள்ளது இலங்கை போக்குவரத்துச் சபை?

இலங்கை போக்குவரத்து சபைக்கு மேலும் 600 பஸ்களை கொள்வனவு செய்ய இருப்பதாக நிறுவன தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்துள்ளார்.

அடுத்த வருடம் இலாபமீட்டும் நிறுவனமாக இ.போ.சவை மாற்ற திட்டமிட்டுள்ளதாகவும், அதற்கான திட்டம் பிரதேச மட்டத்தில் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிதி அமைச்சில் தொடர்ந்து தங்கியிருக்காது அடுத்த வருடம் முதல் சுயாதீனமான நிறுவனமாக செயல்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

பழைய பஸ்ஸுக்குப் பதிலாக புதிய பஸ்களை கொள்வனவு செய்வதே எமது நோக்கம் எனவும், பஸ்கள் நமக்கு கிடைக்கும் வருமானத்துக்கு அமையவே தருவிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

2021ஆம் ஆண்டு நிதி அமைச்சால் எமக்குக் கிடைக்க வேண்டிய தொகையில் ரூபா 4 ஆயிரத்து 300 கோடி ரூபா குறைவாகவே கிடைத்தது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பளை பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரிக்கு கொவிட்!

கிளிநொச்சி– பளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு கொவிட் தொற்று ஏற்பட்டுள்ளது.

எனினும் பொலிஸ் நிலைய சேவை தடையின்றி தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கடந்த 23 ஆம் திகதி விடுமுறைக்குச் சென்று திரும்பியிருந்த நிலையில் நேற்று (வியாழக்கிழமை) தொடர்ச்சியான காய்ச்சல் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் அன்டிஜன் பரிசோதனை மேற்கொண்டதில் கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்

## அர்ச்சனைப் பூக்கள்



சைவ மக்களின் வழிபாட்டுச் செல்நெறியில் நீரும் மலரும் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. இதையே திருநாவுக்கரசு நாயனார் 'சலம் பூவோடு தூபம் மறந்தறியேன்' என்று அடியெடுத்துப் பாடியுள்ளார். அழகிய தூய்மை நிறைந்த புத்துணர்ச்சி மிளிரும் மலர்களால் இறைவனை அலங்கரித்து, அந்த அழகை இரசித்து, அதில் லயித்து, வழிபாடு செய்தல் சைவ மக்களால் பின்பற்றப்படும் வழிபாட்டு முறைமையாகும். இது சரியை வழிபாட்டின் செயலொழுங்காகின்றதென சைவ சித்தாந்தம் உரைக்கின்றது.

பழைய மலர்கள். தூய்மை இல்லாத மலர்கள், பூச்சி அரித்த மலர்கள், நோய் பிடித்த மலர்கள், பூவிலிருந்து காய் கனிகளைத் தரும் மலர்கள் போன்றவற்றை இறைவனுக்கு அர்ச்சனை செய்வதற்குப் பயன்படுத்தக் கூடாது. தவிர, சிறப்பாகத் தாழம்பூ ஒருகால் பொய் உரைத்த காரணத்தால் அர்ச்சனையில் இருந்து தடை செய்யப்பட்டுள்ளதாகப் புராணம் கூறுகின்றது என்பதையும் கவனத்தில் கொள்க.

பூக்களை சுத்தமான பூக்கூடை கொண்டு பறித்து, சுத்தமான நீரில் கழுவி, நாம் வணங்கும் கடவுளர்க்குச் சமர்ப்பிக்க வேண்டும். பூக்களின்பால் இயல்பாக இணைந்துள்ள மென்மையும்,அழகும், சுகந்தமும் இறைவனின் இயல்புகள் என்பதால் அவைகொண்டு பூசை,அர்ச்சனை செய்தல்,அலங்கரித்தல் சிறப்பு என்பர்.

சைவ ஆகமங்கள் எட்டு வகைப் பூக்கள் பூசை அர்ச்சனைக்கு ஏற்றவை என்று விதந்து கூறுகின்றன. அவை புன்னை, செண்பகம், வெள்ளருக்கு, நந்தியாவர்த்தம், பாதிரி, அலரி, நீலோற்பவம், தாமரை ஆகியவை ஆகும்.

இவற்றைவிட நாம் வணங்கும் தெய்வங்களுக்கும் சிறப்பாகவுரிய மலர்களும் அடையாளம் காட்டப்பட்டுள்ளன. அதன்படி சிவனுக்குக் கொன்றை மலரும், பிள்ளையாருக்கு அறுகம் புல்லும், முருகனுக்கு கடம்ப மலரும், உமையவள் சக்திக்கு மல்லிகைப் பூவும், திருமகளுக்கு செந்தாமரையும், கலைமகளுக்கு வெண்தாமரையும் பெரிதும் உகந்த அர்ச்சனை மலர்களாகக் கூறப்பட்டுள்ளன.

தினமும் மலர்கள் கொண்டு கடவுளர்களைப் பூஜிக்க விரும்பும் அடியவர்கள் மலர் செடிகளை தங்களது வீட்டில் வளர்த்துத் தூய்மையுடன் பராமரித்து, அவற்றிலிருந்து பூக்களைப் புதிதாகப் பறித்து, தமது இஷ்ட தெய்வத்துக்குச் சாத்தி மனநிறைவுடன் வழிபடலாம்.

பெரிய ஆலயங்களின் அருகே பூக்கடைகள் காணப்படும். அவற்றிலும் தமக்குத் தேவையான பூக்களைச் சிலர் தெரிவு செய்து வாங்கிக் கொள்வதுமுண்டு.

புனிதம் கொண்ட மலர்களை இறைவனுக்கு வழங்கி அர்ச்சித்து அருளாசியைப் பெறுவோமாக.

**-இராஜாம்பிகை -**
**(சிட்னி, ஆஸ்திரேலியா)**

## பார்ஸ்வத கோணாசம்

**வாரம் ஓர் ஆசனம்**



**செய்(படி)முறை :**

1. உடல் ஒரே நேர்கோட்டில் இருக்குமாறு (தடாசனத்தில்) நிற்கவும். (ஆரம்ப நிலை)
2. மூச்சை இழுத்துக் கொண்டு வலக்காலை இடக்காலிலிருந்து 3 அடி வரை இடைவெளிவிட்டு நிற்கவும். இரு பாதங்களும் ஒன்றுக்கொன்று சமாந்தமாக இருக்க வேண்டும்.
3. உடலைத்திருப்பாது வலது பாதத்தை மட்டும் வலப்புறம் 90 பாகை அளவுக்குத் திருப்பவும்.
4. மூச்சை வெளிவிட்டுக்கொண்டு வலப்புறம் உடலைத் திருப்பி முன்புறம் வளைந்து வலக்கையை வலப்பாதத்திற்கருகில் ஊன்றி வலது முழங்காலை மடித்து வயிறு, நெஞ்சுப் பகுதிகளின் வலப்பகுதி வலது மேற்தொடையுடன் அழுத்தப்பட்டிருக்க வேண்டும். இடது கால் பின்புறமாக நீட்டியபடி நேராக இருக்க வேண்டும்.
5. மூச்சை வெளிவிட்டவாறு இடதுகையை உயர்த்தி தலைக்கு முன்பாக இடக்காதைத் தொடுமாறு நீட்டியபடி பார்வையை இடக்கைவிரல்களின் மீது இருக்குமாறு வைத்து ஆழமாக சுவாசிக்கவும். - உச்சநிலை
6. பின்னர் மூச்சை உள்ளிழுத்தவாறு இடக்கையை பின்புறம் கொண்டுவந்து நாரிப்பகுதியில் வைக்கவும்.
7. மெதுவாக மூச்சை உள்ளிழுத்தவாறு கால்களை அசைக்காமல் நிமிரவும்.
8. மூச்சை வெளிவிட்ட வண்ணம் காலை பழைய நிலைக்குத் திருப்பவும். (90 பாகையில் இலிருந்து)
9. மூச்சை வெளிவிட்ட வண்ணம் வலக்காலை இடதுகாலுக்கருகில் கொணர்ந்து தடாசனத்தில் நிற்கவும்.

**குறிப்பு :**
இதே போல் மாற்றுப் பயிற்சியாக மறுபுறமும் செய்க.

**பயன்கள் :**
மார்புத் தசைகள் நன்கு உறுதிபெற்று விரிவடைகின்றன. கெண்டைக் கால் தசைகள், கணுக்கால்கள், முழங்கால்கள், மணிக்கட்டுக்கள், தோள்மூட்டுக்கள், தொடைத்தசைகள், தசை நார்கள், நரம்புகள் தளர்த்தப்பட்டு வலிமை பெறுகின்றன. பொதுவான உடற் பலவீனத்தை அகற்றி உடல் ஊக்கம், பலம் பெறும். சுவாசக்கோளாறுகள், கண், காது கோளாறுகள் நீங்கும். நீரிழிவு, மலச்சிக்கல், ஜீரணக் குறைபாடுகள், கால் வலிகள் முதலியன குணமாகும். வயிற்றுப் புறத் தசைகள் இருதயச் சுவர்கள், வால்வுகள், இருதயத் தசைகள், நாடி நாளங்கள் வலிமை பெறுகின்றன. அதன் செயற்பாடும் அதிகரிக்கும்.

**- ஸ்ரீ. நதிபரன் -**
**(யோகா போதனாசிரியர், நல்லூர் திவ்ய ஜீவன சங்கம்)**

## முருக வழிபாடு



செந்தமிழுலகில் கற்றோர் முதல் மற்றோர் வரை அனைவரும் எதற்கு எடுத்தாலும் 'முருகா', 'முருகா' என்று சொல்வதைக் காண்கின்றோம். தனி வழி நடந்தால் முருகா, தலை வலித்தால் முருகா, பயங்கண்ட இடத்திலெல்லாம் முருகா, இவ்வாறு வெற்றிக்கு, கல்விக்கு, உத்தியோகத்திற்கு என்று நம் வாழ்வில் ஒன்றிக் கலந்து நிற்பது முருகா எனும் நாமம்.

"தனிவழிக்குத் துணை செங்கோடன் வடிவேலும் மயூரமுமே" - என்று நமக்கு வழிகாட்டியுள்ளார்கள் நம் முன்னோர்கள். முருகா என்று சொன்னவுடன் நம் மனதில் இன்ப எழுச்சி தோன்றுகிறது. முருகன் என்ற சொல்லுக்கு காக்கும் கடவுள் என்று பெயர். படைத்தல், காத்தல், அழித்தல் எனும் மூன்று தெய்வீக செயலில் காத்தல் என்பது இரட்சிப்பது என்று பொருளாகும். ஓம் என்ற பிரணவத்தில் அகாரம், உகாரம், மகாரம் என்ற மூன்று எழுத்துக்கள் உள்ளன. அகாரம் சிருஷ்டியையும், உகாரம் காத்தலையும் மகாரம் அழித்தலையும் குறித்து நிற்கின்றன. இங்கு முருகன் என்ற சொல்லில் முருகு என்பது பகுதி அன் ஆண்பால் ஒருமை விகுதி. மா+ உ=மு , ர+ உ=ரு, க+ உ=கு என்று மூன்று உகாரங்கள் வருவதைக் காணலாம். ஆக முருகன் என்ற சொல் சிறப்புடையதாகிறது. நாம் இறைவனிடத்தில் சிருஷ்டி செய் என்றோ, அழித்துவிடு என்றோ கேட்பதில்லை, மாறாக எங்களை காப்பாற்று என்றுதான் கேட்கின்றோம். இவ்வாறு முருகா என்ற ஒரு நாமத்தை சொன்ன மாத்திரத்தில் எம்மைக் காப்பாற்றி விடுகிறான்.

"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முற்றொன்றிய மூத்தகுடி" தமிழ் மக்கள். நீர் முதற்படைப்பு, அதிலிருந்து மலை, அதனைச் சார மண், மண்ணில் மற்றவை எல்லாம் வந்தன என்பது உலகத் தோற்றத்தை அறிவிக்க வந்த ஓர் கருத்து. இவற்றில் இருந்து மக்கள் பிறந்த இடமும் வாழ்வு தொடங்கிய இடமும் மலையகம். மலைத்தெய்வம் முருகன். தமிழ்க்கடவுள் முருகன். கடவுள் வழிபாட்டில் முதல்தோன்றியது முருகவழிபாடு என்றாகிறது.

"முருகா என்று ஓதுவார் அருகா நலம் பெறுவர்"

**- சிவஸ்ரீ கைலை சந்திரசேகர சிவாச்சாரியார் (நாதன் குருக்கள்)**
**(சிட்னி முருகன் ஆலயம், ஆஸ்திரேலியா)**

## நல்லைக் கந்தன் கழற்கோர் கவிமாலை



தானதன தான தன்ன தானதன தான தன்ன
தானதன தான தன்ன - தனதான
நீதிநெறி யேமறந்த பாதகரை யேகளைந்து
நேசமிகு வாரிலங்க - அருள்வோனே
நீடுகவி யேபுனைந்து பாதமலர் சுடவுந்தன்
நீலமயி லேறிவந்து - அருளாயோ
தீதகல வேயெழுந்து தூணதனை யேபிளந்த
தேவஅரி நாரணன்தன் - மருகோனே
தேவிகுற மாதொடன்பு தேவமட மாதுவந்து
சேரவழ கானமஞ்சம் - வருவோனே
பாதமதை யேவணங்கு பாவியிவன் வாழவென்றும்
பாசவரு ளேவழங்கி - புவிகாவாய்
பாழுவினை யேவழங்கு வேதனையி லேவிழுந்து
பாருழல தேகளைந்து - அருள்தாராய்
மாதவரும் பேணுமுந்தன் பாதமதை நானிறைஞ்சு
மாவலது தீரஎன்று - அருள்வாயோ?
மாசரண மானஅன்பர் ஆணவம தேகநல்லை
மாநகர தேயமர்ந்த - பெருமானே!

**- கவிஞர் குகதாசன் -**

காலைக்கதிர் Kalaikkathir

# சம்பந்தன் - ஹக்கீம் இன்று நேரில் பேச்சு

## மனோவும் பங்கேற்பார் எனத் தெரிவிப்பு



தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில் முக்கியத்துவமிக்க சந்திப்பு இன்று கொழும்பில் நடைபெறவுள்ளது.

இரா. சம்பந்தன், த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கூட்டமைப்பின் சார்பிலும், ரவூப் ஹக் கீம் உள்ளிட்டவர்கள் மு.கா. சார்பிலும் பங்கேற்கவுள்ளனர்.

இந்தச் சந்திப்பில் மனோ கணேசனும் பங்கேற்பார் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும், இதற்கான அழுத்தத்தை இலங்கை அரசுக்கு இந்தியா பிரயோகிக்க வேண்டும் எனக் கோரி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு கூட்டு ஆவணமொன்றை அனுப்பிவைப்பதற்கு தமிழ் பேசும் கட்சிகள் முயற்சித்தன. இதுவரை மூன்று சுற்றுப் பேச்சுகள் இடம்பெற்றுள்ளன.

எனினும், சில அரசியல் காரணங்களால் கூட்டு ஆவணத்தில் கையொப்பமிட முஸ்லிம் கட்சிகள் இழுத்தடிப்பு செய்து வருகின்றன. அக்கட்சிகளின் தலைவர்களுக்கு கடும் அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே இன்று ஹக்கீமை, சம்பந்தன் தரப்பு சந்திக்கவுள்ளது.

முஸ்லிம் தரப்புகள் தொடர்ந்தும் இழுத்தடிப்பு செய்யும் பட்சத்தில், தமிழ்க் கட்சிகள் மட்டும் இணைந்து கையொப்பமிடுவது குறித்தும் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது.





## தேசிய வாசிப்பு மாதம் - 2020 இல் வலி.தெற்கு பிரதேசசபை முதலிடம்!

### வலி.வடக்கு பிரதேசசபை 3 ஆம் இடம்

கல்வி அமைச்சால் தேசிய ரீதியில் நடத்தப்பட்ட தேசிய வாசிப்பு மாத 2020 ஆம் ஆண்டுக்கான போட்டியில் வடக்கு மாகாணத்தில் வலிகாமம் தெற்கு சுன்னாகம் பொது நூலகம் முதலாம் இடத்தையும் வலிகாமம் வடக்கு அளவெட்டி பொது நூலகம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

2 ஆம் இடத்தை வத்தளை ஹெந்தளை பிரதேசத்திலுள்ள பொதுநூலகம் பெற்றுக்கொண்டது.

கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் தேசிய நூலக ஆவண ஆக்கல் சபை மண்டபத்தில் அதன் தலைவர் சோனால குணவர்த்தன தலைமையில் கடந்த புதன் கிழமைநடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி சுரேன் ராகவன் கலந்துகொண்டார்.

வடக்கு மாகாணத்தில் இருந்து வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் தவிசாளர் க.தர்சனும், வலி காமம் வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோ.சுகிர்தனும் நிகழ்வில் கலந்து தமது ஆளுகைக்குட்பட்ட நூலகங்களுக்கான விருதுகளைப் பெற்றுக்கொண்டனர்.

## திருமணத்துக்காக .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளனர் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பெரும் பணத்தையும் பெறுமதியான நேரத்தையும் செலவழித்து திருமணத்துக்காக இலங்கைக்கு விஜயம் செய்துள்ள வெளிநாட்டவர்கள் எப்படியேனும் திருமணப் பதிவையேனும் நடத்தி முடித்து விடவேண்டும் என்ற முனைப்பில் இறுதிக்கட்ட நகர்வுகளில் முனைப்பாக இறங்கியுள்ளனர் எனவும் அறியமுடிகின்றது.

கொழும்பைச் சேர்ந்த திருமணப் பதிவாளர் ஒருவர் கருத்து வெளியிடுகையில், இலங்கை அரசு புதிதாகக் கொண்டுவந்துள்ள நடவடிக்கை முற்றுமுழுதாக வெளிநாட்டவர்களையா கட்டுப்படுத்தும். அன்றேல் இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட ஆனால் தற்போது வெளிநாடுகளின் பிரஜைகளாக மாறிவிட்டவர்களையும் கட்டுப்படுத்துமா என்பது தொடர்பில் தமக்கே தெளிவற்ற நிலை உள்ளது எனத் தெரிவித்தார்.

மற்றுமொரு திருமணப் பதிவாளரிடம் வினவியபோது, இந்த நடைமுறை 2022 ஜனவரி முதலாம் திகதி முதலே அமுலுக்கு வருகின்ற காரணத்தால் திருமணத்துக்காக இலங்கை வந்திருக்கின்றவர்கள் டிசம்பர் 31ஆம் திகதிக்குள் (இன்று) எழுத்துமூல திருமணப்பதிவை செய்வதற்கு தாம் ஆலோசனை வழங்குவதாகத் தெரிவித்தார்.

எழுத்துமூல பதிவை முடித்துவிட்டு பின்னர் தேவைப்படின் அவர்கள் அடுத்த வருடத்தில் வைபவத்தை எடுக்க முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஏற்கனவே பத்துக்கும் மேற்பட்ட ஜோடிகள் கடந்த சில தினங்களுக்குள்ளாக தமது அலுவலகத்தில் எழுத்துமூல திருமணப்பதிவைச் செய்துகொண்டனர் எனவும் அவர் கூறினார்.

## மின்கட்டணம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் பொருள்களுக்குச் சிறிதளவு தட்டுப்பாடுகள் உள்ளன. ஆனாலும், வரிசை யுகம் உருவாகவில்லை.

அதேபோல் மின்கட்டணத்தில் எவ்வித மாற்றமும் வராது. பழைய கட்டணமே அறிவிடப்படும் - என்றார்.

## உள்நாட்டு பால்மா .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனால்தான் இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலையும் இங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. அதேபோல உள்நாட்டு உற்பத்தி வீழ்ச்சியடையாமல் இருப்பதற்கு தேசிய பால்மா விலையும் அதிகரிக்கப்படும்.

400 கிராம் தேசிய பால்மா 20 ரூபாவால் அதிகரிக்கப்படும். ஒரு கிலோ பால்மாவின் விலையும் உயர்த்தப்படும் - என்றார்.

## சட்டவிரோதமாக .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலனைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் கடற்றொழில் அமைச்சரால் குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதேவேளை, வாழ்வாதாரத்துக்காகவே குறித்த இறால் கூடுகளை அமைப்பதற்கு தாம் நிர்ப்பந்திக்கப்பட்டிருப்பதாக, சட்டவிரோத கூடுகளை அமைத்துள்ள கடற்றொழிலாளர்கள் அமைச்சரிடம் தமது நிலையை எடுத்துரைத்தனர்.

அது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அமைச்சர், அனைவருக்கும் பயன் கிடைக்கும் வகையிலேயே பருவமடையாத இறால்களைப் பிடிப்பதற்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெளிவுபடுத்தியதுடன், மேலும் 10 மில்லியன் இறால் குஞ்சுகளை விடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், இடைப்பட்ட காலத்துக்கான வாழ்வாதாரத்துக்காக கொடுவா மீன் வளர்ப்புக்கான கடன்திட்டங்களை இரண்டு வாரங்களில் பெற்றுத்தருவதாகவும், அதற்கான பட்டியலை அதிகாரிகளிடம் வழங்குமாறும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, கண்ணகி நகர் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்தல் மற்றும் எதிர்கொள்ளும் அசௌகரியங்களுக்குத் தீர்வு காணுதல் தொடர்பாக ஆராயும் வகையில் நேற்று கண்ணகி அம்மன் ஆலய மண்டபத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது கருத்துத் தெரிவித்த கடற்றொழில் அமைச்சர்-

உங்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்கு தயாராக உங்களிடம் வந்திருக்கின்றேன்.

என்னைநம்பிஎன்னோடுகைகோர்த்து வருவீர்களாயின் வளமான எதிர்காலத்தை உருவாக்கித் தருவேன் என்று தெரிவித்தார்.

இந்நிலையில், வாழ்வாதார உதவிகள் தொடர்பான கோரிக்கைகளை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் முன்வைத்த கண்ணகி நகர் கடற்றொழிலாளர் சமாசத்தைச் சேர்ந்தவர்களில் ஒரு பகுதியினருக்கு சமுர்த்தி கடன் உதவிகள் நேற்று வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தமிழர்களை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்றுச் செயற்பட்டால் மட்டுமே கௌரவமான வாழ்வு அவர்களுக்குக் கிட்டும் என்பதே உண்மையாகும். ஆனால், அவ்வாறாக இல்லாததொரு சூழலில் தமிழ், முஸ்லிம் தலைமைகளும் மக்களும் ஒருமித்துச் செயற்படுவதென்பது காலத்தின் தேவையாகும்.

உண்மையில் அரசியல் சாசனத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வகையிலேயே 13ஆவது திருத்தச் சட்டத்தை நாம் அமுல்படுத்தக் கோருகின்றோம். மற்றையபடி அதுவொரு தற்காலிக தீர்வேயாகும்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் ஒரு தரப்பாக கையெழுத்திட்ட வகையில் இந்தியாவுக்குப் பொறுப்புள்ளதாலேயே நாம் அதனை வலியுறுத்துகின்றோம்.

ஆனாலும், தமிழ், முஸ்லிம் கட்சிகள் ஒன்றாக அமர்ந்து அரசியல் தீர்வுக்கான தமது நிலைப்பாட்டைப் பேசி தெளிவுபடுத்த வேண்டும்.

சில கட்சிகள் சமஷ்டி பற்றி பிரஸ்தாபிக்கின்றன. ஆயினும், எத்தகைய சமஷ்டி என்பதை கூடி ஆராய்ந்து தீர்க்கமாக முடிவெடுத்தால் சர்வதேச சமூகத்திடம் அதனை முன்னிறுத்திப் பேச்சுக்களை நடத்த முடியும்.

தமிழ் - முஸ்லிம் கட்சிகள் கூட்டாக 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த இந்தியாவைக் கோருகின்ற கடிதம் நாளை (இன்று) 31ஆம் திகதி பூரணப்படுத்தப்படும் என்று நம்புகின்றேன். இரா. சம்பந்தனும் ரவூப் ஹக்கீமும் பேசி முடிவுக்கு வருமிடத்து நாளையே (இன்று) அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஒப்பமிட்ட கடிதம் தயாராகிவிடும் - என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.12.2021 இல் வெளியிடப்பெற்றது.